பட்டுச் சேலைகளின் சோலையாகத் திகழும் ஒரே இடம்!
இளவரசி
சேலைச் சோலை
57, சிறப்பு அங்காடி,
(உள்ளகம்)
யாழ்ப்பாணம்.
[சி-9729]

பக்கங்கள்: ஆறு
Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

கல்யாண, முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான இடம்
இளவரசி
சேலைச் சோலை
57, சிறப்பு அங்காடி,
(உள்ளகம்)
யாழ்ப்பாணம்.
[சி97-29]

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 07 செவ்வாய்க்கிழமை (21 – 03 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 114

# புலிகளின் காலக்கெடு குறித்து
# ஜனாதிபதி மந்திராலோசனை!

## அவசர மாநாடு கூட்டினார்

கொழும்பு, மார்ச் 21

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பது பற்றிய அரசின் நிலைப்பாட்டை மீளாய்வு செய்து முடிவு எடுப்பதற்கு மார்ச் 28 ஆம் திகதி வரை காலக்கெடு விதித்து, விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அனுப்பிய கடிதம் குறித்து —

ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று முன்தினம் அவசர அவசரமாக உயர்மட்ட மாநாடு ஒன்றைக் கூட்டி மந்திராலோசனை செய்தார்.

டென்மார்க், லண்டன் ஆகிய நாடுகளுக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் தாம் நாடு திரும்பிய கையோடு, தலைவர் பிரபாகரனின் கடிதம் குறித்து ஜனாதிபதி விரிவாக மந்திராலோசனை நடத்தினார்.

மூத்த அமைச்சர்களுடன் இக்கடிதம் குறித்து விரிவாக ஆராய்ந்த சந்திரிகா, அண்மையில் யாழ் சென்று திரும்பிய அங்கிலிக்கன் ஆயர் சென்னத் பெர்னாண்டோவையும் அழைத்து அவரிடம் நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

ஜனாதிபதி நடத்திய மந்திராலோசனைகளின் பின் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து விரைவில் அறிவிக்கப்படும் என்று மூத்த அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டார்.

தலைவர் பிரபாகரனின்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### அரச குழு யாழ். வரும்?

யாழ்ப்பாணம், மார்ச் 21

அரசுக்கு மார்ச் 28ம் திகதி காலக்கெடு வழங்கி, விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே.பிரபாகரன் கடிதம் எழுதியிருப்பதை அடுத்து—

அரசின் நிலைப்பாட்டை விடுதலைப் புலிகளுக்கு விளக்குவதற்கு இவ் வார இறுதிக்குள் தனது உயர்மட்டத் தூதுக்குழு ஒன்றை அரசு அவசர அவசரமாக யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுவதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

### தெரிவுக்குழு முன் ஐ.தே.க.!

அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழு நேற்றுப் பிற்பகல் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையில் கூடியபோது, ஐ. தே. க. பிரதிநிதிகள் தெரிவுக்குழு முன் ஆஜராகி தமது கருத்துக்களைச் சமர்ப்பித்தனர்.

ஐ.தே.கவின் செயலாளர் காமினி அத்துக்கோறளை தலைமையில் ஐ தே. கவின் எம்.பிக்கள் ஆஜராகினர்.

சுமார் ஒரு மணி நேரம் நீடித்த இந்தக் கலந்துரையாடலின் போது, சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழு நியமித்தல், அடிப்படை உரிமைகளைப் பேணுதல் ஆகியவை தொடர்பான தனது கருத்துக்களை ஐ. தே. க. வெளியிட்டது. (உ-4)

### பிரபாவின் கடிதம் குறித்து பதற்றமுறத் தேவையில்லை

#### ஜனாதிபதியின் செயலர் கருத்து

கொழும்பு, மார்ச் 21

அரசுக்குக் காலக்கெடு விதித்து விடுதலைப் புலிகளின் தலைவர் திரு பிரபாகரன் அனுப்பியுள்ள கடிதம் குறித்து பதற்றப்படத் தேவையில்லை. சமாதானப் பேச்சுக்களில் தோன்றியுள்ள தற்போதைய நிலை கவலைப்பட வேண்டிய ஒரு தீவிரமான நிலையல்ல

— இவ்வாறு ஜனாதிபதியின் செயலாளர் குசும்கிறி பாலபட்ட பெண்டி கருத்துத் தெரிவித்தார்.

இதற்கிடையில் —

புலிகளின் தலைவர் எழுதியுள்ள பிந்திய கடிதம் சமாதான முயற்சி மிகவும் ஆபத்தான நிலைக்கு உள்ளாகியிருப்பதையே காட்டுகின்றது என செய்தியாளர்கள் சிலரும் அதிகாரிகளும் கருத்து வெளியிட்டிருப்பதாக பி. பி ஸி. குறிப்பிட்டது. (உ–6)

# பிரபாவின் கடிதம் ஓர் எச்சரிக்கையல்ல!

## அமைச்சர் கதிர்காமர் கருத்து

கொழும்பு, மார்ச் 21

அரசுக்கு காலக்கெடு விதித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அனுப்பியுள்ள கடிதத்தை அரசுக்கு வழங்கப்பட்ட ஓர் எச்சரிக்கையாக நான் கருதவில்லை.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

புலிகளின் தலைவர் குறிப்பிட்டுள்ள மார்ச் 28 ஆம் திகதி சமாதானப் பேச்சுக்கான இறுதி நாள் அல்ல.

சமாதானப் பேச்சுக்கள் இடம்பெறும்போது இத்தகைய பிரச்சினைகள் எழவே செய்யும்.

புலிகள் காலக்கெடு குறித்து குறிப்பிட்டிருந்தாலும் அது அமைதி முயற்சி குலைந்து விட்டதாக அர்த்தமாகி விடாது.

இப்போது எழுந்துள்ளது ஒரு பெரும் பிரச்சினையல்ல. இத்தகைய பிரச்சினைகள் குறித்து நாம் அஞ்சமாட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்பா... கடி[illegible] ட்ரீட் மெண் [illegible] மாதிரி இருக்கும் [illegible] சொல்லுங்கோ......!

### வாகன வரி அட்டை பெற மார்ச் 31 வரை அவகாசம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

மோட்டார் ஊர்திகளுக்கு 1995 ஆம் ஆண்டுக்குரிய வரி அட்டை வழங்குவதற்கான கால எல்லை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பதாக போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறிவித்துள்ளனர். இது குறித்து அவர்கள் தெரிவித்திருப்பதாவது:-

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த — மோட்டார் ஊர்திகளுக்கான—1995ஆம் ஆண்டு [illegible] அதிபர்பிரிவு ரீதியாக கற் [illegible] அலுவலகங்களில் வைத்து கடந்த பெப்ரவரி, 22 ஆம் திகதி முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

வரி அட்டை வழங்கும் கால எல்லை மார்ச் 20 ஆம் திகதியுடன் முடிவடையும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இருந்தும் இவ்வரியட்டையினை மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் பெற்றுக்கொள்ளும் வசதி கருதி இக்கால எல்லை எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது [illegible]தையும் —

இத்தினத்திற்குள் வரி அட்டை பெற்றுக்கொள்ளாத

[6ஆம் பக்கம் பார்க்க]

### கிளின்டனின் துணைவியார் இலங்கைக்கு

கொழும்பு, மார்ச் 21

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனின் துணைவியார் ஹிலாரி கிளின்டன் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கின்றார்.

எதிர்வரும் வெள்ளியன்று அமெரிக்காவிலிருந்து புறப்படும் ஹிலாரி கிளின்டன் ஏப்ரல் 6 ஆம் திகதி வரை இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்வார்.

தெற்காசியப் பிராந்திய நாடுகளுடனான அமெரிக்காவின் உறவை வளர்ப்பதற்கும் பலப்படுத்துவதற்குமாகவே இச்சுற்றுப் பயணம் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டது. [உ-4]

### திருமலைக்கு ஈழ அகதிகள்

சென்னை, மார்ச் 21

மற்றொரு தொகுதி ஈழத் தமிழ் அகதிகளை ஏற்றிக்கொண்டு எம் வி நிக்கோபர் கப்பல் நேற்று சென்னையில் இருந்து திருகோணமலைக்குப் புறப்பட்டது.

கடந்த 26ஆம்திகதி ஆரம்பமான — அகதிகளை திருப்பியனுப்பும் — ஒரு கட்ட நடவடிக்கை இந்த அணியுடன் பூர்த்தியாகுகின்றது.

இந்த ஒரு மாத காலத்தில் திருகோணமலைக்கு 4 ஆயிரத்து 600 அகதிகளும், மன்னாருக்கு 4 ஆயிரத்து 600 அகதிகளும் திருப்பி அனுப்பப்பட்டனர். [உ-4-7]

### புலிகளிடம் அமெ. தூதுவர் கோரிக்கை

லண்டன், மார்ச் 21

இனப்பிரச்சினைக்கு அரசமைப்பு முறையிலான தீர்வு ஒன்றைக் காண்பதற்காக விரிவான முறையில் பேச்சுக்கள் நடத்தும்படி விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் திருமதி ரெறெசிற்றா சாப்பர் கோரியுள்ளார். பி. பி. ஸி. சிங்கள சேவை இத்தகவலை வெளியிட்டது.

(உ-6)

### சாதாரணதர பரீட்சை முடிவுகள்

கொழும்பு மார்ச்.21

கடந்த ஆண்டு இறுதியில் நடைபெற்ற ஜி சி ஈ [சாதாரணதரப்]பரீட்சை முடிவுகளை முதலாம் தவணை முடிவதற்குள்—ஏப்ரல் 4 ஆம் திகதிக்கு முன்னர்—வெளியிடுவதற்கு பரீட்சைத் திணைக்களம் முயற்சித்து வருவதாக பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்லதெரிவித்துள்ளார். [உ-6]

### பங்குச் சந்தை வர்த்தகம் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 21

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களில் நெருக்கடி ஏற்பட்டிருப்பதை அடுத்து—

கொழும்பு பங்குச் சந்தை வர்த்தகத்தில் நேற்றுப் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. (உ)

### செய்திச் சாரம்

### பதிலுக்கு 10 புலிகள் விடுதலை?

கொழும்பு, மார்ச் 21

தம் வசமிருந்த 16 யுத்தக் கைதிகளை விடுதலைப் புலிகள் விடுவித்தமைக்கு பதில் நடவடிக்கையாக—

தனது காவலில் உள்ள —விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படும் — பத்துப்பேரை நேற்று அல்லது இன்று விடுவிக்க அரசு முடிவு செய்திருந்ததாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

### கிழக்கு பல்கலை. மாணவர் உண்ணாவிரதம்

கொழும்பு, மார்ச் 21

கிழக்கு மாகாண இணைந்த பல்கலைக்கழக மாணவர்கள் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று திங்கட்கிழமை முதல் உண்ணாவிரதமிருந்து வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

தமக்கொரு நிரந்தர இடத்தை அமைத்துத் தருமாறு கோரி கடந்த 13 ஆம் திகதி முதல் ஆர்ப்பாட்டம் செய்து வரும் இ தமாணவர்கள், சம்மாந்துறையில் உள்ள சுமார் — 24 கோடி ரூபாய் பெறுமதியான — நெல் சந்தைப்படுத்தும் சபைக்குச் சொந்தமான — களஞ்சியக் கட்டடங்களை அவர்கள் ஆக்கிரமித்து வைத்துள்ளனர். (உ-4-14)

### ஆணைக்குழு விசாரணை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 21

கடந்த 17 வருடகால ஐக்கியதேசியக் கட்சி ஆட்சியின் கீழ் நிகழ்ந்த ஒழுங்கீனங்கள், முறைகேடுகள், ஊழல்கள், மோசடிகள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணைகளை நேற்றுக் காலை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்தது.

உயர்நீதிமன்ற நீதியரசர் பிரியந்த பெரேரா தலைமையிலான இந்த ஆணைக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஹெக்டர் யாப்பாவும், மேல் நீதிமன்ற நீதியரசர் எஸ். என். டி ஜெயசூரியவும் பணிபுரிகின்றனர். (உ-4-6)

### 100 சிப்பாய்கள் ஆஸ்பத்திரியில்!

கொழும்பு. மார்ச் 21

மாதுறு ஓயா இராணுவ முகாமில் கடந்த வெள்ளியன்று இரவுச்சாப்பாட்டின் பின்னர் வாந்தியெடுத்த சுமார் நூறு சிப்பாய்களும் பிறரும் பொலநறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது [உ-6]

புலிகள் விடுவித்த

### பொலீஸார் 15 பேருக்கும் தலா ரூ. 1லட்சம் நஷ்ட ஈடு!

கொழும்பு,மார்ச் 21

விடுதலைப் புலிகளினால் விடுவிக்கப்பட்ட யுத்தக் கைதிகளான 15 பொலீஸாருக்கும் தலா ஒரு லட்சம் ரூபா நஷ்ட ஈடு வழங்கப்படுமென பொலி மா அதிபர் பிராங்கி சில்வா தெரிவித்தார்.

அவர்களுக்கு சுகவீன விடுமுறையும் தேவைப்படும் பிற விடுமுறைகளும் வழங்கப்படும். தமது சொந்தக் கிராமப் பகுதிகளில் உள்ள — தமக்கு விருப்பமான—பொலீஸ் நிலையத்தில் பணிபுரிய அவர்கள் அனுமதிக்கப்படுவர் என்றும் பொலீஸ் மா அதிபர் தெரிவித்தார். [உ-4-6]

### 22 படையினரையும் புலிகள் விடுவிப்பர் என நம்பிக்கை

#### பாலபட்டபெண்டி கூறுகிறார்

கொழும்பு. மார்ச் 21

தமது காவலில் இருந்த யுத்தக் கைதிகளான 15 பொலீஸாரையும், இராணுவச் சிப்பாய் ஒருவரையும் விடுதலைப் புலிகள் விடுவித்திருப்பதை அடுத்து —

புலிகளின் காவலில் உள்ள 22 இராணுவத்தினரும் விரைவில் விடுவிக்கப்படுவர் என அரசு நம்புவதாக ஜனாதிபதியின் செயலாளர் குசும் சிறி பாலபட்டபெண்டி தெரிவித்தார்.

பூநகரி, மாங்குளம் தாக்குதலின் போது கைது செய்யப்பட்ட 20 இராணுவத்தினரும்—

'சாகரவர்த்தனா' தகர்ப்பின்போது கைது செய்யப்பட்ட கட்டற்படைக் கப்டன் போயாகொட மற்றும் கடற்படை அதிகாரி ஆகியோருமே விடுவிக்கப்படுவர் என அரசு எதிர்பார்க்கின்றதாம்.

கைதிகள் விடுவிப்பு குறித்து கருத்து வெளியிட்ட பாலபட்டபெண்டி—

இனப்பிரச்சினையைத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### இன்று வரும் கோமாரியில் 6,000 பரல் ம. எண்ணெய்

யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் எரிபொருள் முகவர்களின் ஆறாயிரம் பரல் மண்ணெண்ணெய்யுடன் 'கோமாரி' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப் படுகிறது.

இக்கப்பலில் ஆயிரம் மெற்றிக்தொன் உரம் மற்றும் சிமெந்தும் எடுத்துவரப்படுகின்றன.

இதேவேளை—

கொழும்பில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டிருக்கும் ''லங்கா முடிதா'' எதிர்வரும் திங்கட்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது

(அ-3-4-7)

### யாழ். ஆயர் குழுவினர் வலி. வடக்குக்கு விஜயம்

#### மக்கள் கஷ்டங்களை அறிவர்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ் மறைமாவட்ட ஆயர் அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம், மனித முன்னேற்றக் கழகத் தலைவர் அருட்கலாநிதி ஜெபநேசன், வண. பிதா அருள்நேசன் ஆகிய மூவர் அடங்கிய குழு ஒன்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளைப் பார்வையிடுவதற்காக இன்று ''ஹபரண'' கப்பலில் காங்கேசன்துறை புறப்படுவர்.

இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் வாழும் மக்களின் பிரச்சனைகளையும் அவர்கள் அனுபவித்து வரும் துன்ப, துயரங்களை அவர்கள் நேரில் கேட்டறிவதோடு அங்குள்ள நிலைமைகளையும் அவதானிப்பர்.

முதலில் வலி - வடக்குப் பகுதியைப் பார்வையிட்டு முடிந்ததும் குழுவினர் தீவுப் பகுதிகளுக்குச் செல்வர். அங்கும் மக்களின் அவலங்களைக் கேட்டறிவர்.

அத்துடன் வண. பிதா அருள்நேசன் நெடுந்தீவுப் பகுதிப் பங்குத் தந்தையாக ஆயரால் திருநிலைப்படுத்தப்படுவார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலான விஜயத்தை முடித்துக் கொண்டு இவர்கள் இம் மாதம் 26ந் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் திரும்புவர்.

தமிழகத்தில் இருந்து திரும்பி

### வவுனியாவில் உள்ளோர் யாழ். அழைத்து வரப்படுவர்

யாழ்ப்பாணம், மார்ச்.21

தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்று இலங்கை திரும்பி வவுனியாவில் முகாம்களில் தங்கியுள்ள யாழ் மாவட்டத்தைச்சேர்ந்தஒரு தொகுதி மக்களை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வர முயற்சி எடுக்கப்பட்டுள்ளனர்.

கிளாலி ஊடாக இவர்களை அழைத்துவர அகதிகளுக்கான ஐ நா. தூதரக யாழ் அலுவலக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா அரச அதிபர் யாழ்ப்பாண அரச அதிபருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

வார இறுதியில் 277 பேர் இங்கு அழைத்து வரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. [அ-3-4]

### கடும் பாதிப்பு நிவாரணம் வழங்குவதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச்.21

யாழ்.மாவட்டத்தில் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு. கடும்பாதிப்புற்றோருக்கான நிவாரணக் கொடுப்பனவு[2 000ரூபா] வழங்கப்படவிருக்கிறது.

கடும் பாதிப்புற்றோர் நிவாரணக்கொடுப்பனவு முன்னர் வழங்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டிருந்ததால் சுமார் 4 ஆயிரம்பேர் இந்த நிவாரணக் கொடுப்பனவை பெற முடியாதிருந்தனர். குறிப்பிட்ட நிவாரணக்கொடுப்பனவை வழங்குவதற்கு அரசு இணக்கம் தெரிவித்துள்ளதைஅடுத்து கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு கணக்காளர், இந்த கொடுப்பனவுக்கான காசோலைகளை எடுத்து வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

காசோலை எடுத்து வரும் பட்சத்தில் ஏற்கனவே இந்த நிவாரணக் கொடுப்பனவு கிடைக்காதவர்களுக்கு அடுத்தவாரம் முதல் உரிய பணம் வழங்கப்படும் எனத் தெரிய வந்துள்ளது. [அ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை கம்பன் கழகத்தின்
1995 ஆம் ஆண்டிற்கான
மகரயாழ் விருது
பெறும்



வைத்திய கலாநிதி
து. வி. ஜெயகுலராஜா
அவர்களுக்கு
எமது நெஞ்சம் நிறைந்த
வாழ்த்துக்கள்

தலைவர், உறுப்பினர்கள்,
அங்கத்தவர்கள்.
செவிப்புலன் வலுவற்றோர்,
புனர்வாழ்வு நிறுவனம்,
'றூட்' விளையாட்டுக் கழகம்,
'றூட்' கிறிஸ்தவர்க்கழகம்,
'றூட்' கைத்தொழில்பேட்டை.
426, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம். [35808]



THE JAFFNA CHRISTIAN UNION
Congratulates
Our president
DR. T. W JEYAKULARAJAH
for having been awarded
THE MAHARA YARL VIRUTHU
for 1995

A city is happy when honest people have good fortune
Proverbs 11: 10

(C-810) THE SECRETARY



THE ST. PETER'S METHODIST CHURCH
CONGRATULATES
Their Good Friend
DR. T. W JEYAKULARAJAH
For having won
THE MAHARA YARL VIRUTHU FOR - 1995

Blessed are those who hunger and thirst for righteousness for they shall be satisfied
Mathew 5:6

The MINISTER.
(C/809)



வெலிங்டன் சந்திக்கருகில்!
UNIKCO
COMPUTER CENTRE
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
★ BASIC Language ★ LOTUS 1-2-3
★ PASCAL Language ★ dBASE iii PLUS
★ WORD PROCESSING (Wordstar Rel 55)
25-03-1995 வார இறுதி வகுப்புகள்
24-03-1995 வார நாள் வகுப்புகள்
மேலும்
COMPUTER PRINTING (Letter Graph)
செய்து கொடுக்கப்படும்.
குறிப்பு:
★ கட்டணங்கள் தவணை முறையில் செலுத்தலாம்.
★ 60 மணித்தியாலங்களுக்குக் குறையாத செய்முறைப் பயிற்சி
★ தமிழில் விளக்கங்கள் கொடுக்கப்படும்.
மேலதிக விபரங்கட்கு:
37, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்.
[சி/627]


# வடக்கு- கிழக்கு மாகாணத்திலுள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

## ஆளுநர் காமினி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21
வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவும் சுமார் 6 ஆயிரம் ஆசிரியர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்குதுரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வடக்கு- கிழக்கு மாகாண ஆளுநர் திரு. காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆகிய கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்கள் அண்மையில் ஆளுநரைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

அச்சமயமே ஆளுநர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

இப்பேச்சுவார்த்தைகள் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றன.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆசிரிய வெற்றிடங்கள் மற்றும் திணைக்கள வெற்றிடங்கள் பற்றியும் அவை தொடர்பாக நிலவும் குறைபாடுகள் பற்றியும் பேச்சுக்களை நடத்தவே இச்சந்திப்பு ஏற்பாடாகி இருந்தது.

அதன் போது வடக்கு- கிழக்கு மாகாணத்தில் ஆசிரிய நியமனங்களில், இடம்பெற்றுள்ள முறைகேடுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுவதற்கும் ஆளுநர் உறுதியளித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் பல்வேறு திணைக்களங்களிலும் சமயா சமய ஊழியர்கள் ஆஸ்பத்திரி ஆய்வு கூடத் தொழில் நுட்பவியலாளர்கள் ஆகிய தரங்களைச் சேர்ந்த ஊழியர்கள் இரண்டாயிரம் பேர் பற்றாக் குறையாக உள்ளனர்.

இது தொடர்பாக சுட்டிக் காட்டப்பட்டபோது—

இவ் வெற்றிடங்களையும் நிரப்ப உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஆளுநர் தெரிவித்தார்.

மாகாண நிர்வாகம் எதிர்நோக்கும் நிதி நெருக்கடி குறித்து தம்மைச் சந்தித்த எம். பிக்களுக்கு விளக்கமளித்த ஆளுநர்,

வடக்கு - கிழக்கு மாகாண சபை இயங்காமலிருப்பதனால் வரி அறவிட முடியாமல் உள்ளது. அதனால் வருடாந்தம் 14 கோடி ரூபா இழப்பு ஏற்படுகிறது என்றார்.

எனவே மாகாண சபைக்குரிய சட்டங்களை ஆராய்ந்து வரி அறவிடக் கூடிய சாத்தியக் கூறுகளை தனக்குத் தெரியப்படுத்துமாறும் அவர் எம். பிக்களைக் கேட்டுக் கொண்டார்.

[இ-5-4]

# பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு கப்பல் மூலம் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 21
கைதடியிலுள்ள பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு ஒரு கோடி ரூபா பெறுமதியான உபகரணங்களும் இயந்திர சாதனங்களும் எடுத்து வரப்பட உள்ளன.

இதற்கான அனுமதியை கூட்டுப்படைகளின் நடவடிக்கைச் செயலகம் வழங்கியுள்ளது.

இவை கப்பல் மூலம் இங்கு எடுத்துவரப்பட்டதும் பனை ஆராய்ச்சி நிலையம் மீண்டும் தனது செயற்பாடுகளை ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-4-7)

# கோப்பாய் வட்டத்தைச் சேர்ந்த 184 விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கைக் கடன்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உதவி திட்டத்தின் கீழ் கிராமிய நிதியத்தினூடாக அண்மையில் கோப்பாய் வட்டத்தைச் சேர்ந்த 184 விவசாயிகளுக்கு மேட்டு நிலப் பயிர்ச்செய்கைக்கான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிராமிய உற்பத்திக் குழு ஊடாக வழங்கப்பட்ட இக் கடனுதவியில் ஒரு பயனாளிக்கு பத்தாயிரம் ரூபா வீதம் மொத்தம் பதினெட்டு லட்சத்து நாற்பதினாயிரம் ரூபா வழங்கப்பட்டது.

இது தவிர வடமராட்சி கிழக்கு கெருடாவில் பகுதியைச் சேர்ந்த 17 பயனாளிகளுக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சத்து பதினேழாயிரம் ரூபா வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# நினைவு நாள் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 21
மன்னார் சிலாவத்துறை இராணுவ முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் நான்காம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் இன்று மாலை 7 30 மணி முதல் நாவற்குழியில் உள்ள நினைவாலயத்தின் முன்றிலில் நடைபெறும்.

தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. வெற்றிச்செல்வன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் நினைவுக் கருத்துரைகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்

[உ]

# கமக்காரர் அறிமுக அட்டை மீள புதிப்பித்தல் ஆரம்பம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் யாழ். மாவட்ட வட்டச் செயலகத்தினரால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கமக்காரர் அறிமுக அட்டைகள் 1995 ஆம் ஆண்டுக்காக மீள புதுப்பித்தல் நடவடிக்கைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றது.

இந்தக் கமக்காரர் அறிமுக அட்டையின் பயன்பாட்டை நன்கு அறிந்து, அவற்றின் பயன்களை கடந்த காலங்களில் அனுபவித்த விவசாயிகள் அட்டையைப் புதுப்பிப்பதில் ஊக்கமாக ஈடுபட்டு வருகின்றார்கள் என்றும் —

இந்த அட்டையைப் இதுவரை பெறாதவர்கள் விண்ணப்பித்து அட்டையை பெற ஆர்வம் செலுத்தி வருகிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

# மாகாண சபை பதவிகளுக்கு புதியவர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 21
வடக்கு - கிழக்கு மாகாண சபையின் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுச் செயலாளராக திரு. எஸ். விநாயகலிங்கம் நியமனம் பெற்றுள்ளார்.

இதுவரை காலமும் இந்த அமைச்சுச் செயலாளராகப் பணியாற்றிய திரு. எஸ். யோகநாதன் மத்திய அரசின் இந்து கலாசார அமைச்சு மேலதிகச் செயலாளராக நியமனம் பெற்றுச் சென்றுள்ளார்.

மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளராக திரு. செ. அமிர்தலிங்கம் நியமனம் பெற்றுள்ளார்.

மாகாண கல்வியமைச்சு பிரதிச் செயலாளராக திரு. எஸ். டிவகலாலாவை நியமிக்க பிரதம செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளார் என அங்கிருந்து கிடைத்த செய்தி ஒன்று தெரிவித்தது.

[அ-3]

# மோதிலால் நேருவை புலிகளே கொல்ல முயற்சி

## நீதிமன்றில் பொலிஸார் அறிக்கை

ஜனாதிபதி சட்டத்தரணி மோதிலால் நேருவைக் கொலை செய்ய முயன்றவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட— யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்த — அச்சுதன் பாலச்சந்திரன் விடுதலைப் புலிகள் உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்.

— இவ்வாறு கல்கிசை நீதிவான் ஜெயந்த பெரேரா முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட புலன் விசாரணை அறிக்கை ஒன்றில் இரகசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆகஸ்ட் 24 ஆம் திகதி பப்பலபிட்டியில் உள்ள மோதிலால் நேருவின் வீட்டில் வைத்து அவரைச் சுட்டுக் கொலைசெய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக மருதானைப் பொலிஸார் "லொட்ஜ்" ஒன்றில் வைத்து சந்தேக நபரை கைது செய்ததாகவும்—

அவரிடமிருந்து தானியங்கி துப்பாக்கி ஒன்றைக் கைப்பற்றியதாகவும் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் —

சந்தேக நபர் விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவினைச் சேர்ந்தவர் என்றும் [illegible]

சட்டத்தரணியை கொலை செய்யும் நோக்[illegible] அவர் கொழும்பு வந்துள்ளார் என்றும் —

புலன் விசாரணைகளின் [illegible]லம் தெரிய வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

தாம் கைப்பற்றிய தடயப் பொருளான துப்பாக்கி தொடர்பாக இரசாயன பரிசோதகரின் அறிக்கை தமக்கு இன்னமும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபரை இம் மாதம் 23 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

[உ-5]

# ஆஸ்பத்திரியில் நுளம்பு தொல்லை

தென்மராட்சி, மார்ச் 21
பளை வைத்தியசாலையில் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளதாக வைத்தியசாலை வார்ட் களில் தங்குவோர் தெரிவிக்கின்றனர்.

(இ-117]

# மன்னாரில் கெயர்ஸ்தாபன கிராமிய மதிப்பீட்டு பட்டறை

அகில உலக கெயர் ஸ்தாபனம், துரித கிராமிய மதிப்பீட்டுப் பட்டறை ஒன்றை மன்னார் மாவட்டத்தில் மேற்கொண்டது.

கெயர் ஸ்தாபனத்தின் வடபிராந்திய பிரதிநிதி செல்வி. மோறாபேரி தலைமையில் மன்னாரின் தச்சனா, மருதமடு, சின்னப்பண்டி விரிச்சான், பூப்பெய்த குளம் ஆகிய கிராமங்களில் இப்பட்டறை நடத்தப்பட்டது.

[illegible] நிறுவனங்களும் இப் பட்டறை[illegible]

இப்பட்டறையின் முக்கிய கருதுகோள் அடிப்படை வசதிகள் அற்ற வறிய மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையும் தேவைகளையும் இனங்காணுவதே ஆகும்.

இப் பட்டறையின் மதிப்பீடுகளை செல்வி மோறாபேரியும், கெயர் ஸ்தாபன கிளிநொச்சிப் பிரிவுப்பிரதிநிதி திரு. பால்ராஜ் கிளிநொச்சி பல்கலைக்கழக விவசாய பீடத்தைச் சேர்ந்த திரு. [illegible]முகன் ஆகியோரைக் கொண்ட குழுவினரும் தயாரித்துள்ளனர். [இ-5 31]

# பொலீஸ் கட்டளைப்பீடம் விரைவில் மறு சீரமைப்பு

பொலிஸ் சேவையின் கட்டளைப் பீடம் மற்றும் சட்டமைப்பு விரைவில் மறு சீரமைக்கப்படும் என கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இதுதொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் நடவடிக்கையில் விசேட ஆணைக்குழு ஒன்று ஈடுபட்டிருப்பதாகவும்—

அதன் அறிக்கை கிடைத்ததும் அதனடிப்படையில் பொலிஸ் சேவை சீரமைக்கப்படும் என்றும் அதிகாரி ஒருவர் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)


யாழ்.
றோட்டறிக் கழகத்தின்
54 ஆவது
ஆண்டு நிறைவை ஒட்டி
நடத்தப்படும்
மாபெரும்
அஞ்சலோட்ட நிகழ்வு
RELAY CARNIVAL

எதிர்வரும் ஏப்ரல் 8, 9 ஆம் திகதிகளில்
யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்
பாடசாலை மாணவ / மாணவியருக்கு:
19 வயதின் கீழ்
7 வயதின் கீழ்
15 வயதின் கீழ்
மற்றும்
கழக வீரர்கள்,
வீராங்கனைகளுக்கு

மேலதிக விவரங்களைப் பெற:
செயலாளர்,
யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம்,
292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தலைவர்.
யாழ். றோட்டறிக் கழகம்.
[சி-812]



யாழ். றோட்டறிக் கழக ஆதரவில்
கண் சத்திர சிகிச்சை
முகாம் - 7
[ Cataract Surgery Camp – 7 ]
அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர்
பகுதிகளிலும், அவற்றை அண்டிய பகுதிகளிலும் வதியும் மக்களுக்காக நடத்தப்பட இருக்கும் மேற்படி இலவச கண் சத்திர சிகிச்சை முகாமுக்கான நோயாளர் தெரிவு எதிர்வரும் வெள்ளிக்கிழமை [24-3-95] அச்சுவேலியில் நடைபெறும்.
கண்ணில் பூப்படலம் [Cataract] நோயினால் பாதிக்கப்பட்ட 55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும்.
தெரிவு செய்யப்படும் நோயாளருக்கான சத்திர சிகிச்சை கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் 9 - 4 - 95 [ஞாயிறு] காலை ஏழு மணி முதல் நடைபெறும்.
மேலதிக விவரங்களுக்கு நாளைய பத்திரிகைகளைப் பார்க்கவும்
தலைவர்,
யாழ். றோட்டறிக் கழகம்.
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [சி/814]


REMEMBRANCE OF FIRST DEATH ANNIVERSARY

Today is a surrowful day to remember the Death Anniversary of:

JOSEPH G. RAJENDRAM
(Chartered Accountant - K. K. S. Cement)

He was the liberating force of the constantine family.

Gem of a disciplinarian accredited his society by exemplary behaviour of his life.

Lead, a stupendous life – but suddenly departed from his benefactors: Wife Doreen, and children: Nimal and Barbara to their surprise.

What a mournful death!
May his soul rest in peace!

Fondly remembered by:
S. A. OSWALD,
(Cousin of late Rajendram)
8, Cathedral street,
Jaffna.
(35810)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாவின் பிந்திய கடிதம் குறித்து அரசாங்கம் உன்னிப்பாக ஆராய்வு

கொழும்பு, மார்ச் 21

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான அரசின் முடிவை மீள்பரிசீலனை செய்வதற்கு காலக்கெடு விதித்து தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எழுதியுள்ள பிந்திய கடிதத்தை அரசாங்க உயர்மட்டக் குழு நேற்று முன்தினம் இரவு உன்னிப்பாக ஆராய்ந்ததாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க டென்மார்க், லண்டன் ஆகிய இடங்களுக்கான தமது வெளிநாட்டு சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் மாலை கொழும்பு திரும்பிய பின்னரே இக்கடிதம் குறித்து அரசாங்க உயர்மட்டம் விரிவாகப் பரிசீலனை செய்ததாகத் தெரியவருகின்றது.

நாடு திரும்பிய ஜனாதிபதி சந்திரிகா அன்று மாலையே கம்பஹா மாவட்டத்தில் விளையாட்டுத்துறை கட்டடத் தொகுதி ஒன்றைத் திறந்து வைக்கும் வைபவத்தில் பங்குபற்றினார்.

தலைவர் பிரபாகரனின் கடிதம் அரச உயர்மட்டத்தில் ஆராயப்பட்ட பின்னரே அது குறித்து தகவல் வெளியிட்ட அரசின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர்—

''சமாதான நடவடிக்கைகளுக்கு திரு. பிரபாகரன் காலக்கெடு விதிக்கவில்லை சில விடயங்கள் குறித்து பதில் தருவதற்கே அவர் கால எல்லை குறிப்பிட்டிருக்கிறார்—என்றுகூறினார்.

(உ)

ருவாண்டா தலைநகரில்

## சிறையில் மூச்சுத் திணறி 22 கைதிகள் உயிரிழப்பு

லண்டன், மார்ச் 21

ருவாண்டா தலைநகர் கிக்காலியில் உள்ள சிறைச்சாலை கொட்டகை ஒன்றில் இடநெருக்கடி மற்றும் அதனால் ஏற்பட்ட மூச்சுத்திணறல் ஆகியவற்றினால் 22 கைதிகள் உயிரிழந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் ருவாண்டாவில் ஆயிரக்கணக்கானோரை பலி கொண்ட இனமோதல்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் 74பேரை இடநெருக்கடி காரணமாக ஒரே சிறைக் கொட்டகைக்குள் விட்டு அதிகாரிகள் பூட்டியதாகவும்—

இதனால் மூச்சுத்திணறி கைதிகள் இறந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்துக்குப் பொறுப்பான சிறை அதிகாரி ஒருவரும் இரவுநேர காவலரும் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

(உ)

## அகதிகள் எடுத்து வரும் பொருள்களுக்குவரிஇல்லை

கொழும்பு, மார்ச் 21

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பும் அகதிகள் தம்முடன் கொண்டுவரும் பொருள்களுக்கு சுங்கவரி விதிக்கப்பட மாட்டாது எனவும் —

எதிர்காலத்தில் நாடுதிரும்பும் அகதிகள் விடயத்தில் தாராளமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும்—

நீதி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் உறுதியளித்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

அகதிகள் எந்த வகையிலும் துன்புறுத்தப்படுவதை நாம் அனுமதியோம் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்திலிருந்து கடந்த 27 ஆம் திகதி திரும்பிய அகதிகளால் எடுத்து வரப்பட்டு — திருமலையில் சுங்க அதிகாரிகளால் வரி விதிக்கப்பட்டு— பின்னர் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள் திரும்பவும் உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-4)

## சித்திரத் தேரை புதுப்பிக்க நடவடிக்கை

ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் தேசமாக்கப்பட்ட சுழிபுரம் பறாளை முருகமூர்த்தி கோவிலின் புதிய சித்திரத் தேரை நாலுலட்சம் ரூபா செலவில் புதுப்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-28)

எம். பியின் கூற்றுக்கு எதிர்ப்பு:

## பத்திரிகையாளர்கள் சபையைவிட்டு வெளிநடப்பு

கொழும்பு, மார்ச் 21

ஐக்கியதேசியக்கட்சி அம்பாந்தோட்டை எம். பி மேவின்சில்வா கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் பேசஎழுந்தபோது பத்திரிகையாளர் அனைவரும் சபையை விட்டு வெளிநடப்பு செய்தார்கள்.

திரு. மேவின் சில்வா கடந்தவாரம் நாடாளுமன்ற வரவுசெலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் பேசும்போது, பத்திரிகையாளர்கள் ஒவ்வொரு எம். பிக்களிடமும் குடித்து உணவு அருந்துகிறார்கள். மற்றும்சில எம். பிக்களுக்கு பத்திரிகையாளர்களை விட்டுவிட்டு எதையும் செய்யமுடியாதிருக்கிறது என்றும் தெரிவித்திருந்தார்.

பிரஸ்தாப எம். பியின் இந்தக்கூற்றை எதிர்த்தே பத்திரிகையாளர்கள் வெளிநடப்புச் செய்தனர். (ஒ-4)

மற்றொரு ஊழல் மோசடி சம்பவம்

# 95 கோடி ரூபா பெறுமதிமிக்க காணி ரூ. 35 லட்சத்துக்கு விற்கப்பட்டது!

கொழும்பு மார்ச் 21

கடந்த ஐ. தே. க. ஆட்சிக்காலத்தில் அரச காணி விற்பனை தொடர்பாக இடம்பெற்ற மற்றொரு ஊழல் மோசடி குறித்து தகவல் வெளியாகியிருக்கின்றது.

கூட்டுறவு மொத்த விற்பனைத் திணைக்களத்தினால் 1968ஆம் ஆண்டு 45 லட்சம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஐந்த ஏக்கர் காணி கடந்த ஆண்டு 35 லட்சம் ரூபாவுக்கு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு விற்பனை செய்யப்பட்டிருப்பது பற்றிய தகவலே அம்பலத்துக்கு வந்துள்ளது.

இந்தக் காணியின் தற்போதைய பெறுமதி 95 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

இவ்வளவு பெறுமதிமிக்க காணியை 35 லட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கான அனுமதியை ரணில் விக்கிரமசிங்கவையும் ஓர் உறுப்பினராகக்கொண்ட அமைச்சரவை உபகுழு கடந்த வருடம் வழங்கியிருப்பதாகவும்—

இந்த மோசடிச் சம்பவம் குறித்து ஊழல், மோசடி மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பாக விசாரணை நடத்தும் விசேட ஜனாதிபதி ஆணைக் குழுவின் கவனத்துக்குத் தாம் கொண்டுவர இருப்பதாகவும்—

பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான டிலான் பெரேரா தெரிவித்தார்.

இந்தக் காணி விற்பனைச் சம்பவம் குறித்து உரிய சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவிருப்பதாக கூட்டுறவு மொத்த விற்பனைத் திணைக்களத் தலைவர் தெரிவித்தார். (உ)

## பம்பாய் நகரின் பெயர் விரைவில் மும்பாய் ஆகும்

புதிய மாலநில அரசு உறுதி

பம்பாய், மார்ச் 21

மகாராஷ்டிர மாநிலத்தில் புதிய அரசாங்கம் ஒன்றை அமைத்துள்ள பாரதிய ஜனதாக் கட்சியும் சிவசேனைக் கட்சியும் மாநிலத் தலைநகரான பம்பாயின் பெயரை மும்பாய் என மாற்றியமைப்பதற்கு கடந்த வாரம் உறுதி பூண்டன.

பாரதிய ஜனதாக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து சிவசேனைக் கட்சி அங்கு ஆட்சியமைத்துள்ளது. சிவசேனையின் பிரதிநிதியான மனோகர் ஜோஷி முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

பம்பாய் நகரின் பெயரை இந்துத் தெய்வமான மும்பா தேவியின் பெயரில் மும்பாய் என மாற்ற வேண்டும் என 1971 இலிருந்து சிவசேனை வற்புறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

பம்பாயின் பெயரை மாற்றுவதற்கு புதுடில்லியுடன் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை தாங்கள் ஆரம்பிக்கவிருப்பதாகவும்—

ஆங்கிலத்தி[illegible] மராத்தியை அரச கரும மொழியாக மாற்றவிருப்பதாகவும்—

சிவசேனை[illegible] தெரிவித்தார். (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அம்பாள் துணை

சாவகச்சேரி - நுணாவிற்குளம்

அருள் மிகு கண்ணகை அம்பாள்

தேவஸ்தானம்

**சங்காபிஷேகம்**

மேற்படி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற 45 நாள் மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவாக இச் சங்காபிஷேகம் பவ ஆண்டு பங்குனித் திங்கள் 8 ஆம் திகதி நாளை (22-03 95) புதன்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

அன்று மாலை 7 மணிக்கு அம்பாள் ஊர்வலம் புறப்பட்டு கைதடி நுணாவில், தென்மட்டுவில், நுணாவில் ஆகிய கிராமத்து மக்களுக்கு இன்னருள் பாலித்து மறுநாள் 7 மணியளவில் ஆலயத்தை வந்தடைவாள்.

மறுநாள் 23 - 03 - 95 வியாழக்கிழமை நிகழ்ச்சிகள்

முற்பகல்: ஆலயங்களில் மறைந்து வரும்

முரசுக் கச்சேரி

திரு. செல்லையா செல்வராசா குழுவினர் (வரணி)
திரு. வடிவேலு குழுவினர் (தென் மட்டுவில்)
திரு. பாஸ்கரன் குழுவினர் (தென்மட்டுவில்)
திரு. ந வடிவேலு குழுவினர் (மறவன் புலோ)

வானர நடனம்

திரு. பொன்னம்பலம் குழுவினர் அளவெட்டி

நண்பகல்: அன்னதானம்

அனைவரையும் வருகை தந்து அம்பாளின் இன்னருள் பெறுமாறு அழைக்கிறோம்.

உபயகாரர்

நுணாவில் குளம் கண்ணகை ஆலயக் கூட்டுப் பிரார்த்தனைச் சபை

[35809]

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு: 27 — 06 — 1931



உதிர்வு: 19 — 02 — 1995

திருமதி

நேசமலர் பாலகிருஷ்ணன்

[இளைப்பாறிய ஆசிரியை, சாவகச்சேரி–இந்துக் கல்லூரி]
[B. A. - (Cey.) Dip-in-Ed ]

அன்பின் திருவுருவாகவும் பண்பின் பிறப்பிடமாகவும் பாசத்தின் உறைவிடமாகவும் வாழ்ந்து எங்களை வழிப்படுத்திய எங்கள் இதய தெய்வமே! உங்களை என்றென்றும் எங்கள் இதயத்தில் வைத்துப் பூசிக்கின்றோம். உங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அவர்களின் மரணம் குறித்து நேரிலும் செய்திகள் மூலமும், மலர் வளையம் வைத்தும், அனுதாபம் தெரிவித்த, எமது துயரத்தில் பங்கேற்றிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன் இன்று (21- 03- 1995) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்;
அன்பு கணவன், பிள்ளைகள்,
மருமகள், சகோதரர்கள்.

''சிவஸ்தான்'',
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

(35811)

**புலிகளின் குரல் வானொலியில்**

21 — 03 — 1995

செவ்வாய் இரவு

- ★ 8-01— ஊர்சுற்றும் ஒலி வாங்கி
- ★ 8-10 — அறிந்துகொள்ளுங்கள் — தகவற்களஞ்சியம்
- ★ 8-20 — நலந்தானா?— விற்றமின் குறைபாட்டால் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் ஆலோசனை
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 —கருத்துக்களம்— இ.இராஜேஸ்வரன் எழுதிய ''அக்கறை''
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

22 — 03 — 1995

புதன் காலை

- ★ 7-02— மாவீரவணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

**தமிழீழ வானொலி ஒலிபரப்பு**

செவ்வாய் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக்கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — தமிழிசை
- ★ 5-30 — வானொலி மதியூகம் — 12
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 — இவ்வாரம் இவர்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு

## விவசாய பயிற்சி வகுப்பு

தென்மராட்சி, மார்ச் 21

பளைப் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கான விசேட விவசாயபயிற்சி வகுப்பினை பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகத்தினர் பளையில் நடத்திவருகின்றனர். (இ-117)

## மீண்டும் இயங்கவைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 21

மன்னார்மாவட்ட கூட்டுறவு சபையை மீண்டும் இயங்கவைப்பதற்கான நடவடிக்கையை அதன் தலைவர் எஸ். மரியாம்பிள்ளை மேற்கொண்டு வருகின்றார்.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்தமையால் 1990 ஆம் ஆண்டிற்குப்பின் இச்சபை இயங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஒ-17)

உ

இணுவையம் பதியில்

**திருமுறைப் பெருவிழா**

மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள்

21 – 03 – 1995 செவ்வாய்க்கிழமை

★ தலைவர்

கலாநிதி சபா. ஜெயராசா
(தலைவர், நுண்கலைத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்)

மாலை

4-00 மணி: மங்கள இசை

5-00 மணி: பண்ணிசை
இணுவில் இளம்தொண்டர்சபை மாணவர்கள்
இணுவில் இந்துக்கல்லூரி மாணவர்கள்

5-20 மணி: மங்கள விளக்கேற்றல்
திரு. த. கந்தசாமி
(கலா அழகுக் களஞ்சியம் - யாழ்நகர்)
திருமதி ச. சொக்கலிங்கம்
(பொறுப்பதிகாரி, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, உடுவில்)

5-30 மணி: வரவேற்புரை
செல்வன் வே. பிரேமதயாளன்

5 40 மணி: தலைமையுரை

5-55 மணி: ஆசியுரை
குருமகா சந்நிதானம் மெய்கண்டார் ஆதீனம்
சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள்
(பிரதமகுரு, இணுவில் சிவகாமி அம்மன் கோயில்)
சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்
(குருகுலம், இணுவில்)
சிவஸ்ரீ. வை. சோமாஸ்கந்தக்குருக்கள்
(பிரதமகுரு, இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில்)

6-10 மணி: வாழ்த்துரை
திரு. ஆ. மகாலிங்கம்
(பிரதேச செயலர் – வலி – தெற்கு)

6-20 மணி: மெல்லிசைக் கச்சேரி (பண்ணிசை)
வயலின் — திரு. உ. இராதாகிருஷ்ணன்
நாதஸ்வரம் — திரு. R. கேதீஸ்வரன்
மிருதங்கம் — திரு. K. கண்ணதாசன்
கடம் — திரு. சதா. வேல்மாறன்

7-15 மணி: ஆய்வுரை
"ஆறாம் எட்டாம் திருமுறைகள் சுட்டும் அடிநிமிர் கிளவி"
திரு. ந. வி. மு. நவரத்தினம்

7 30 மணி: சிறப்பு சொற்பொழிவு
"திருமுறைச் செல்வம்"
சிவத்தமிழ் வித்தகர்
சிவ. மகாலிங்கம் அவர்கள்
(விரிவுரையாளர்,
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

8-30 மணி: நிறைவுரை
கவிஞர் சோ. பத்மநாதன்
(உப அதிபர்,
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை)

9 00 மணி: பண்ணிசை
பாட்டு — செல்வி சந்திரிக்கா கணேஸ்வரன்
செல்வி விமலாம்பிகை இராசதுரை

9-30 மணி:
பாட்டு — சங்கீதபூஷணம்
வி. சிவஞானசேகரம்

★ அணிசெய் இசைக்கலைஞர்கள்
வயலின் — பிரம்மஸ்ரீ
S. வெங்கடேஸ்வர சர்மா
மிருதங்கம் — செல்வன் க. சஜன்
திரு. க ப. சின்னராசா

10 00 மணி:
இணுவில் இளந்தொண்டர் சபையினரின்
பக்த நந்தனார்
(இசைநாடகம்)
நெறியாள்கை திரு. மா. ஸ்ரீரங்கநாதன்
(இசை ஆசிரியர்)

★ நன்றியுரை
செல்வன் க. வீரசக்திரு ன்

இணுவில் கந்தசுவாமி கோயில்,
இளந்தொண்டர் சபை.

திருமுறை விழா சிறப்புற வாழ்த்துகிறோம்.

அளவெட்டி மல்லாகம்
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

[சி-802]

**WALK - IN - INTERVIEW**

Suitable candidates are invited for walk - in - Interview to fill the following vacancies:

(1) **Store – keeper**
Experience: **Three years in store keeping**

(2) **Accounts Clerk:**
**Knowledge of cost accounts Experience preferred.**

Please call over between 2-00 p.m to 5-00 p m on 21st March, 95 with written application along with relevent documents

**HOTEL GNANAMS,**
**Jaffna.**

[C-813]

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

7 துண்டு சோபா குசன் செற்றி, அலுமாரி சோக் கேஸ், சாப்பாட்டு மேசை, கதிரை, பின்னல் செற்றி, டிரெஸிங் ரேபிள், சந்தோர் மேசை, புத்தக றாக்கை, இரும்பு ஸ்ரூல், கடை றாக்கை [8x8] மற்றும் வீட்டுத் தளபாடங்கள். குறிஞ்சி மெடிக்கலுக்கு அருகில், பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. [35786]

நல்ல நிலையிலுள்ள 2 ஸ்ரீ தொடர் பேட்பிறிபெக்ற் (Fordprefect) கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கருணா, ''முருகன் இல்லம்'' பழம் றோட், இருபாலை, கோப்பாய். (35806)

நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தில் புதிய லுமாலா, ஏசியா, ஈஸ்ட்ரேன் துவிச்சக்கர வண்டிகள் 24-3-95 வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு விற்பனை செய்யப்படவுள்ளது பொது முகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம். [சி-811]

## வீடு வளவு விற்பனைக்கு

திருநெல்வேலி சந்திக்கு அருகில் வீடு. வளவு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் திருமதி வனிதா தேவி விவேகானந்தன், செம்பாட்டு லேன், பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கு. (மேஜர் முரளி பாலர் பாடசாலைக்கு அருகில்) [35803]

## மணமகள் தேவை

ஜேர்மனியிலிருந்து 10 வருடங்களுக்கு பின் யாழ்ப்பாணம் வந்துள்ள 37 வயதுடைய றோமன் கத்தோலிக்க மணமகனுக்கு ஜேர்மனிக்குப் போகக்கூடிய மணமகள் தேவை. தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 769, உதயன், யாழ்ப்பாணம். [35802]

## வீனஸ் அன்ரனா

கார் பற்றறி மூலம் 12'' கறுப்பு - வெள்ளை ரீ. வியில் ரூபவாஹினி - மெட்ராஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு அன்ரனா பொருத்தி வசதி செய்துதரப்படும். (கார் பற்றறி, 12'' கறுப்பு - வெள்ளை ரி. வி. உள்ளவர்கள் தொடர்புகொள்க) வீனஸ் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி (சி-397)

## பயிற்சி வினாத்தாள்கள்

முதலாம் தவணைப் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் ஆண்டு 3 தொடக்கம் O/L வரை எல்லாப் பாடங்களுக்கும் யாழ் Bond கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளன எல்லா ப்ரபல புத்தக நிறுவனங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். (8390)

# புதிய கட்சியாக பதியுமாறு விண்ணப்பம்

கொழும்பு, மார்ச் 21

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் லலித் பிரிவு புதிய கட்சியாக தன்னைப் பதிவு செய்துகொள்ள விண்ணப் பித்திருக்கிறது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி [லலித் பிரிவு] என்ற கட்சி பெயரில் இயங்கவிருக்கும் இந்த அமைப்பின் தலைவராக போக்குவரத்து அமைச்சரும் லலித்தின் துணைவியாருமான சிறிமாலி அதுலத்முதலி தெரிவு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. [உ]

# ஆரம்ப சுகாதார நிலையம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

அரியாலை நாவலடி பகுதியில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட இந்நிலையத்தை இம்மாதம் 6 ஆம் திகதி பதில் யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் வை. சிறிகாந்தா திறந்து வைத்தார். (இ-4)

# FIRST ANNIVERSARY REMEMBRANCE



| Born: | Died: |
|---|---|
| 11 | 21 |
| — | — |
| 12 | 03 |
| — | — |
| 1940 | 1994 |

## JOSEPH GUNANAYAGAM RAJENDRAM

(Formerly Deputy Chief Internal Auditor, Kankesan Cement Works)

''God took him home. it was His will
But in our hearts, we love him still''

Fondly Remembered by
His Wife & Children.

19. Forest Office Lane,
Chundikuli.

(35807)

# 13 ஆம் வருட நினைவலைகள்



| உதயம்: | அஸ்தமனம்: |
|---|---|
| 15 | 14 |
| — | — |
| 09 | 03 |
| — | — |
| 1912 | 1982 |

## அமரர் பொ. கணபதிப்பிள்ளை

[சட்டத்தரணியும் சமாதான நீதிவானும் உடுப்பிட்டி]

திதி: 21 — 03 — 1995

எங்கள் அன்புத் தெய்வமே! தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

தங்கள் அன்புக்குரிய;
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனிமார்,
சகலன்மார்.

சரணவாய் வடக்கு,
உடுப்பிட்டி.

[35711]

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி

## இலட்சுமிப்பிள்ளை இராமு

[காலஞ்சென்ற ஞானம் மில் உரிமையாளர் திரு. வ. இராமு அவர்களின் துணைவி]

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 10 — 01 — 1917 | 20 — 02 — 1995 |

அன்பெனும் விளக்கு அணைந்து இன்று
ஒரு திங்கள் சென்று மறைந்தது - ஆயினும்
உன் முகப் புன்னகை மட்டும்
எம்மவர் மனதில் நின்று நிலைக்குதே.

நாளை (22 - 03 - 1995) புதன்கிழமை நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும், மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை வேண்டுகின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்.

ஞானம் மில்,
[illegible] சந்தையடி,
கரவெட்டி.

[35760]

வலிகாமம் மேற்கு பிரதேச கலாச்சார பேரவையினரின்

# மாபெரும் இசைவிழா

மகாகணபதி பிள்ளையார் கோயில் வீதி
சித்தன்கேணி.

## 3ஆம் நாள் 21 - 03 - 1995 செவ்வாய்க்கிழமை

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் மத்தி, தொல்புரம் கிழக்கு, தொல்புரம் மேற்கு, பொன்னாலை, மூளாய், பனிப்புலம், பண்ணாகம்

ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் ஆதரவில்

மாலை

**5-00 — 6-00** மங்கள இசை
திரு. கி. நடராசா குழுவினர்

**6-00 — 6-30** வயலின் இசை
திருமதி தி. குணபாக்கியம் குழுவினர்

**6-30 — 7-15** இன்னிசை விருந்து
சங்கீத பூஷணம் திரு. வ. உருத்திரன்

**7-15 — 8-00** மங்கல விளக்கேற்றல்
வைத்திய கலாநிதி பூ. கயிலாயநாதன்
திரு. நா. கிருஷ்ணசாமி

★ வரவேற்புரை
திரு. இ. ஸ்ரீரஞ்சன்
(கிராம உத்தயோகத்தர் தொல்புரம் மேற்கு)

★ தலைமையுரை
திரு. கா. சந்திரராசா
(பிரதேச செயலாளர் / மேலதிக அரசாங்க அதிபர்)

★ பிரதம விருந்தினர்
திரு கா. சந்திரபாலன்
(அதிபர் விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம்)

★ சிறப்பு விருந்தினர்
பண்டிதர் திரு ப. இராசகுரு
(பிரசித்த நொத்தாரிசு)
திரு. மு நடராசா
(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர்)
திரு. ந. இராமச்சந்திரன்
(பொறியியலாளர்)
திரு. கா. அரிச்சந்திரா
(இளைப்பாறிய விளையாட்டு அதிகாரி)

★ நன்றியுரை
திருமதி திலகவதியார் சிவபாக்கியநாதன்
(கிராம உத்தியோகத்தர் தொல்புரம் கிழக்கு)

**8-00 — 8 30** நடன நிகழ்ச்சி
மூளாய் மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் வழங்கும்

**''அலைகள் ஓய்வதில்லை''**
நாட்டிய நாடகம்

**8-30 — 9-30** இன்னிசைக் கச்சேரி
செல்வி பரமேஸ்வரி கணேசன் (விரிவுரையாளர்)
திரு. எஸ். கோபிதாஸ் — வயலின்
திரு. கே. கண்ணதாசன் — மிருதங்கம்

**9-30 — 10-30** கெஞ்சிற் கச்சேரி
திரு. வே. இரத்தினம் குழுவினர்

**10-30 — 11-15** நாடகம்
★ கற்பின் மகிமை ★
(சகானா கிளைக்குழு - நெல்லியான்)

● இசைப் பிரியர்களையும், அன்பர்களையும், பொதுமக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— கலாச்சாரப் பேரவையினர்.

[சி-797]

# 9-ம் ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில்: | அநியாய அழிப்பால்: |
|---|---|
| 10 | 21 |
| — | — |
| 02 | 03 |
| — | — |
| 1966 | 1986 |

## செல்வி சேனாதிராசா பிரேமதரா

''ஆயிரம் பேர் நடுவே
அழகாகப் பிறந்த மங்கை
தாயொருத்தி மடியில்
தங்காமல் போன மகள்
ஓ... அன்பு மகள்!''


உங்கள் ஆத்ம சாந்திக்காக தினமும் பிரார்த்திக்கும்:

பெற்றோர், அத்தான், அக்கா
மகன்மார், அம்மம்மா,
உறவினர்கள்

[illegible]

[35801]

# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



## தவமணிநாயகம் முரளிகிருஷ்ணா

லெப்டினன் சிறைவாசன் (சிறை)

| மண்: | விண்: |
|---|---|
| 24 — 11 — 1967 | 21 — 03 — 1989 |

வீரத்தின் விளைநிலமே
வெற்றிபெறும் பாதையிலே
தீரத்தால் முன்னடந்து
செங்குருதிக் கொடை ஈந்து
ஊருக்கும் உலகுக்கும்
உன் பெயரை நிலைநாட்டி
தீரனாய் மறைந்தாயே;
வீரனாய் உறைந்தாயே;

சிறைசென்று உன்னுடலைத்
தியாகத்தால் வாட்டி விட்டாய்
அறைகின்ற உன்னாமம்
சிறைவாசன் ஆகியதே
மறைமுதலாம் மண்ணேத்த
மகாவீரனாகி விட்டாய்:
குறையொன்று மில்லை ஐயா;
குலவிளக்கு நீ எமக்கு;


சிலை எடுத்துப் பெயர்சூட்டி
திருவீதி அமைத்தார்கள்
கலையுணர்வில் உன்னுருவை
ஓவியத்தில் புனைந்தார்கள்
அலைமோதும் துயர்த்துளிகள்
எம்மகத்தை நனைத்திடவே
உலைவாயில் மெழுகுபோல்;
உருகுவது காண்பாயோ;

அன்புப் பெற்றோரும்,
உடன் பிறப்புகளும்.

''உதயதாரகை'',
மல்லாகம்.

(8291)

# நெஞ்சில் நீங்காத 6-ம் மாத நினைவலைகள்



அமரர்

## பொன்னையா பாலச்சந்திரன்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 15 — 03 — 1952 | 23 — 10 — 1994 |

திதி: 21 - 03 - 1995

அன்பால், பண்பால். அறிவால் பாச உள்ளங்களில் எல்லாம் அணையாத தீபமாக ஒளிருகின்ற அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல கற்பக விநாயகரை வணங்குவோமாக

குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

குளுக்கண்டி வீதி,
கட்டைப்பிராய்.

[35797]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## சணம் பித்தம் சணம் வாதமா?

விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சு நடத்துவதையே அரசு விரும்புகிறது என்றும், பேச்சுவார்த்தையில் வெளிநாட்டு மத்தியஸ்தத்தை அரசு விரும்பவில்லை என்றும் அரசாங்கத் தரப்பில் இப்போது தெரிவிக்கப்படுகிறது!

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்தவுடன், விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்துவது குறித்து ஆயத்தம் செய்யப்பட்ட வேளையிலும், வெளிநாட்டு மத்தியஸ்தம் தேவையில்லை என்பதே அரசின் நிலைப்பாடாக இருந்தது.

அது மட்டுமன்றி பேச்சுவார்த்தைகள் இரகசியமாக நடக்கமாட்டா என்றும், இரு சாராரும் பேசும் விடயங்கள் மக்களுக்குப் பகிரங்கப் படுத்தப்படும் என்றும் அரசாங்கம் கூறியது.

புதிய அரசு பதவிக்கு வருமுன்னர், ஐக்கிய தேசியக் கட்சிக் காலத்தில் போர் முடிவின்றி நீடிப்பதைக் கண்டு, அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்களை தொடங்குவதற்கு மத்தியஸ்தம் வகிப்பதற்கு மேற்கு நாடுகள் சில விருப்பம் தெரிவித்தன. ஆனால் அப்போதைய அரசு வெளிநாட்டு மத்தியஸ்தத்தை முற்றாக நிராகரித்துவிட்டது.

இதனையும் மனதில் வைத்தே சந்திரிகா அரசு, தானும் வெளிநாட்டு மத்தியஸ்தத்தை விரும்பவில்லை, நாடவில்லை என்று ஆரம்பத்தில் தெரிவித்தது.

ஆனால் சமாதானப் பேச்சை முன்னெடுக்க இயலாமல், சங்கடப்பட நேர்ந்த தருணத்தில், வெளிநாட்டார் மத்தியஸ்தம் தனக்கு உதவியாக இருக்கும் என்று சந்திரிகா கருதினார். பிரெஞ்சுப் பிரமுகர் ஒருவரை மத்தியஸ்தராக அமர்த்தி பேச்சுவார்த்தைகளை இரகசியமாக நடத்துவதற்கு முயன்றார்.

எனினும் விடுதலைப் புலிகள் அதற்குச் சம்மதிக்கவில்லை. அரசும், தாமும் நடத்திவரும்பேச்சு முறிவடையின் மட்டும், வெளிநாட்டு மத்தியஸ்தத்தைப் பற்றி யோசிக்கலாம் என்பதே அவர்களின் நிரந்தர நிலைப்பாடாக உள்ளது.

இப்போது சமாதானப் பேச்சுக்கள் தடங்கலுற்று நிற்கின்றன. இதற்குக் காரணம் முழுக்க முழுக்க அரசாங்கமே என்பதில் இரண்டு கருத்துகளுக்கு இடமில்லை. அங்கேயும் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை முதலில் தீர்ப்பது, அரசியல் தீர்வு குறித்துப் பேசுவது, இரண்டையும் சம காலத்தில் ஆராய்வது என்று நிலையில்லாது வேளைக்கு வேளை தனக்குள் தானே குழம்பிக் கொள்கிறது. அதனாலேயே பேச்சுக்கள் இனி நடக்குமா, சமாதான முயற்சி முறிந்துவிடுமா, மீண்டும் போர் தொடங்குமா என்ற சந்தேக நிலை தோன்றியுள்ளது.

இந்த நிலைகண்டு வெளிநாடுகள் சில, பேச்சுக்கள் முறிவடைந்து விடாமல் இருக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு தாம் மத்தியஸ்தம் வகிக்க முன்வந்துள்ளன.

நோர்வே, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் தாம் மத்தியஸ்தம் வகிக்க விருப்பம் தெரிவித்துள்ளன. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள், தாம் பேச்சுக்கு உதவத் தயாராக இருப்பதாகத் தெரிவித்து வருகின்றன.

இவற்றைக் கேட்டதுமே, வெளிநாட்டு மத்தியஸ்தத்தை விரும்பவில்லை என்று அரசு இப்போது தெரிவிக்கிறது!

இவ்வாறு எல்லா விவகாரங்களிலுமே வேளைக்கு வேளை முரண்பட்ட நிலையைக் கைக்கொள்வது எதனைக் காட்டுகிறது?

அரசுக்கு எதிலுமே நிலையான கொள்கை இல்லை; சந்தர்ப்பத்திற்கு ஏற்றால் போல் மாற்றிக்கொள்ளும் குணம் கொண்டது என்பதே அதன் வெளிப்பாடாகும்.

சணம் பித்தம், சணம் வாதம் என்ற நிலையிருந்தால் வியாதி சிக்கலாகி மோசமடைந்து ஆபத்தாகவே முடியும்.

# தமிழருக்கு உப ஜனாதிபதி பதவி; 4 தமிழ்க் கட்சிகள் கூட்டாக யோசனை

கொழும்பு, மார்ச் 21

அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் நான்கு தமிழ்க் கட்சிகள் கூட்டாக சமர்ப்பிக்கவிருக்கும் யோசனையில் —

உப ஜனாதிபதி பதவி ஒன்று உருவாக்கப்பட்டு, அந்தப் பதவி தமிழருக்கு வழங்கப்படுவதை உத்தேச புதிய அரசமைப்பு உறுதி செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், "புளொட்" அமைப்பின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, மலையக மக்கள் முன்னணி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி [ஈ. பி. டி. பி] ஆகியவை கூட்டாகச் சமர்ப்பிக்கவிருக்கும் அரசமைப்புத் திருத்த யோசனையிலேயே இந்த விடயம் குறிப்பிடப் பட்டிருந்தது.

இந்த நான்கு கட்சிகளையும் சேர்ந்த 29 பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்துக்கு அதிகாரப்பரவலாக்கல் செய்யப் பட வேண்டும் என்றும் —

அந்த அமைப்புக்குள் முஸ்லிம்களுக்கு என தனியாக "அக சுயாதிக்க சபை" ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் —

நான்கு தமிழ்க் கட்சிகள் சமர்ப்பித்த யோசனையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

### மைலந்தனைப் படுகொலை:

## 21 ராணுவத்தினர் மீது 72 குற்றச்சாட்டுகள்

கொழும்பு, மார்ச் 21

மைலந்தனைகொலை வழக்கில் சந்தேக நபர்களாக அடையாளம் காணப்பட்ட 21 இராணுவத்தினருக்கும் எதிராக 35 பொது மக்களை கொலை செய்தது, 12 பொது மக்களை கொலை செய்ய முயற்சித்தது மற்றும் சட்ட விரோதமாக கூட்டம் கூட்டியது உட்பட 72குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

1992 ஆம் ஆண்டு அராலித் துறையில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட இராணுவ உயர் பீடத்தைச் சேர்ந்த பலர் கொல்லப்பட்டிருந்தனர்.

இச் சம்பவத்திற்கு பழிவாங்கும் நோக்கில் 1992—ஆகஸ்ட் 9 ஆம் திகதி மைலந்தனைக் கிராமத்தினுள் புகுந்து இராணுவத்தினர் அங்கிருந்த பல அப்பாவித் தமிழ் மக்களைப் படுகொலை செய்தனர்.

இப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக 21 இராணுவத்தினர் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு எதிராக மட்டக்களப்பு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது

இவ் வழக்கு விசாரணைகளுக்காக இந்த 21 இராணுவத்தினரும் இம்மாதம் 15 ஆம் திகதிபலவித பாதுகாப்புடன் நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட்டனர்.

அன்று குற்றப் பத்திரிகையும் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்த 21 இராணுவத்தினரினதும் சார்பில் வழக்காட சட்டத்தரணிகள் எவரும் அன்று நீதிமன்றத்திற்கு சமூகம் தர வில்லை.

இதனால் இவ் வழக்கு தொடர்பான விசாரணைகளை ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதிக்கு வடக்கு — கிழக்கு, மேல் நீதிமன்ற ஆணையாளர் பொ வடிவேல் ஒத்தி வைத்தார்.

(இ-5-7)

## உரமானிய திட்டம் ஏப்ரலில் நடைமுறைக்கு வருகிறது

கொழும்பு, மார்ச் 21

உரமானியத்திட்டம் அடுத்த மாதம் முதல் நடைமுறைக்கு வரும் ஒவ்வொரு விவசாயியும் 700ரூபாவை மானியமாகப் பெற்றுக் கொள்வார்.

இந்தக் கொடுப்பனவை பிரதேச செயலகங்கள் கமத்தொழில் சேவைக் குழுக்கள், விவசாயிகள் ஸ்தாபனங்கள் ஆகியவற்றிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்று உரச் செயலகத்தின் பணிப்பாளர் டி. ஆர். விஜயதிலக தெரிவித்திருக்கின்றார்.

சுமார் 8லட்சம் விவசாயிகள் இந்தக் கொடுப்பனவைப் பெறுவதற்கு தகுதிபெற்றிருக்கிறார்கள். புதிய மானியத் திட்டத்திற்கு அமைய அரை ஏக்கருக்கும் மூன்றரை ஏக்கருக்கும் இடையிலான நெற்காணியுள்ள விவசாயிகள் ஒரு போகத்திற்கு 700 ரூபாவைப் பெற்றுக் கொள்வார்கள்.

சிறு போகத்திற்கான கொடுப்பனவு அடுத்த மாதம் ஆரம்பமாகும். பெரும் போகத்திற்கான கொடுப்பனவை ஒக்டோபரில் ஆரம்பிப்பதற்கு முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

தேயிலை, றபர், தென்னை உட்பட ஏனைய பயிர்களுக்கும் கூட உரமானியத் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றார்.

இதனால் சுமார் 5லட்சம் பேர் நன்மையடைய இருக்கின்றாகள் என்றும் திரு. விஜயதிலக தெரிவித்திருக்கின்றார். (ஒ-4)

## சனசமூக நிலையம் ஆட்சேபம

யாழ்ப்பாணம், மார்ச் 21

மணிப்புரிப் பகுதியில் நடைபெற்று வந்த மாதாந்த தாய் — சேய் பராமரிப்பு சிகிச்சை நிலையம் எதிர்வரும் 23 ஆம் திகதியன்று அங்கு நடைபெறமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மணிப்புரி — உதயபுரம் பகுதி மக்களை நாவலடிக்கு வருமாறு சுகாதாரப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

மணியந்தோட்டம் கலைமகள் சனசமூக நிலையம் இதற்கு ஆட்சேபம் தெரிவித்து பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

கர்ப்பிணித் தாய்மார் புதிய இடத்துக்குச் செல்வது கஷ்டம் என்றும், வழமை போல மாதத்தின் நான்காவது வியாழக்கிழமைகளில் தாய்—சேய் பராமரிப்புநிலையத்தை மணிப்புரியிலேயே நடத்துமாறும் அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

[அ-14]

## இலங்கை மாணவருக்கு ஆஸி. புலமைப் பரிசில்!

யாழ்ப்பாணம், மார்ச். 21

ஆஸ்திரேலிய அபிவிருத்திக் கூட்டுத்தாபன புலமைப் பரிசில் திட்டத்தின் (Australian Developmen Co-operation ScholarShip Scheme) கீழ் இலங்கை மாணவர்களுக்கும் புலமைப் பரிசில்கள் வழங்கப் படவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட—ஜி சீ. ஈ உயர்தரப்பரீட்சையில் 300க்கு மேற்பட்ட மொத்தப் புள்ளிகளை பெற்ற— மாணவர்கள் இப்புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.

சமூக பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களுக்கு பிரத்தியேக சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும்—

50 வீதமான புலமைப் பரிசில் வாய்ப்புகள் பெண்களுக்கு ஒதுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பட்டதாரிகள், பல்கலைக்கழகத்தில் கல்வியை தொடர்ந்து கொண்டிருப்பவர்கள் ஆகியோர் இப்புலமைப்பரிசிலுக்கு தகுதியுடையவர்கள் அல்லர்.

விண்ணப்ப முடிவுதிகதி ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி ஆகும்.

மேலதிக விவரங்களை இல, 15, 2 ஆவது ஒழுங்கை, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரியில் அமைந்துள்ள உதயன் விளம்பரப்பணிமனையில் பார்வையிடலாம். (இ-14)

## விளையாட்டு துறைபற்றிய கருத்தரங்குகள்

விடுதலைப்புலிகளின் கொடிகாமம் வட்ட அரசியற் பிரிவினரும் மாணவர் அமைப்பின் தென்மராட்சிப் பிரிவினரும் இணைந்து கொடிகாமம் வட்டப்பகுதியில் உள்ள கிராமங்களில் விளையாட்டுத் துறையினை மேம்படுத்தும் நோக்குடன் கிராமம் கிராமமாக விளையாட்டுத் துறை பற்றிய கருத்தரங்குகளையும், விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தி வருகின்றனர்.

மாணவர் அமைப்பினர் பாடசாலைகளிலும், அரசியற் பிரிவினர் கிராமங்களில் உள்ள இளைஞர்கள் யுவதிகளிடையேயும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றனர். (இ-117)

### ஜி. சீ. ஈ. பரீட்சையில்

## ஆள் மாறாட்டம் செய்த மாணவருக்குச் சிறை!

கொழும்பு, மார்ச் 21

1993 ஆம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற ஜி. சீ. ஈ சாதாரணத் தேர்வில் ஆள் மாறாட்டம் செய்தனர் எனக் குற்றஞ் சாட்டப்பட்ட இரண்டு மாணவர்களுக்கு — 5 வருட காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இத் தண்டனை காலி நீதவானினால் விதிக்கப்பட்டுள்ளது.

காலி சங்கமித்த பாலிகா வித்தியாலய பரீட்சை நிலையத்தில் இம் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தார்கள்.

மோசடி தவிர்ப்புப் பிரிவினர் — தமக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் — இவ்விரு மாணவர்களையும் கைது செய்து காலி நீதிவான் முன் ஆஜர் செய்தனர்.

[ஒ-5]

# இலங்கை அகதிகளை திருப்பி அனுப்ப பிரிட்டன் சகலவழிகளிலும் முயற்சிக்கிறது

தமிழ் அகதி விண்ணப்பதாரர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கான முயற்சியில் பிரித்தானிய அரசின் உள்நாட்டு அலுவலகம் தற்பொழுது தீவிரமாக ஈடுபட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

1993 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட அகதி அந்தஸ்து மேன்முறைமீடு சம்பந்தப் பட்ட சட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்படும் அகதி விண்ணப்பங்கள் யாவுமே உள்நாட்டு அலுவலகத்தினரால் நிராகரிக் படுகின்றன.

தவிர்க்க முடியாததும் பரிதாபத்திற்குரியதுமான சூழ்நிலைகளை உடைய விண்ணப்பதாரர்கள் மட்டும் இதற்கு விதிவிலக்காய் அமைந்து விசேட அனுமதியை பெறக்கூடும்.

ஆனால் நடைமுறையில் இவ்வகைச் சூழ்நிலைகளை நிரூபிப்பது என்பது மிகவும் கடினமானது என்பதை உள்நாட்டு அலுவலகத்துடன் தொடர்பு கொள்பவர்கள் அறிவர்.

உள்நாட்டு அலுவலகம் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்தே தமிழ் அகதி விண்ணப்பதாரர்களுக்கு இதுவரை கொடுத்து வந்த விசேட அனுமதியை வழங்காது நிறுத்திவிட்டது என்று சட்டத்தரணிகளும் அகதி தாபனங்களும் கூறி வருகின்றன.

பிரித்தானிய தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழுப் பிரதிநிதிகள் உள்நாட்டு அலுவலக உயர் அதிகாரிகள் இருவரை சந்தித்து உரையாடிய போது தமிழ் அகதி விண்ணப்பதாரர்கள் பொருளாதாரக் காரணங்களுக்காகவே பிரித்தானியாவிற்கு வருவதாகக் கூறியுள்ளதாக அறியப்படுகிறது.

இதனை மறுத்துக் குழுவின் பிரதிநிதிகள் விவாதித்த போதும் அவ்வதிகாரிகள் தம்நிலையினை மாற்றும் போக்கினைக் காணக்கூடியதாக இருக்கவில்லை. இப்படியான ஒரு நிலைப்பாட்டினையே தமிழ் சட்ட அறிஞர்கள் சங்கத்தினர் உள்நாட்டு அலுவலர்கள் சந்திப் பின்போதும் காணக்கூடியதாக இருந்ததாக கூறினார்கள்.

### விசேட அனுமதி மறுப்பு ஏன்?

இவ்வாறு உள்நாட்டு அலுவலகம் விசேட அனுமதியை திடீரென வழங்காது விட்டதற்கு அடிப்படையாக இருக்கும் காரணிகள் எவையெனப் பார்ப்பது இங்கு அவசியமாகின்றது.

தமிழ் அகதி விண்ணப்பதாரர்களுக்கு தற்போது கொடுக்கப்படும் தமது நிராகரிப்பிற்கான காரணங்கள் அடங்கிய கடிதங்களில் பின்வரும் காரணங்கள் உள்நாட்டு அலுவலகத்தால் தரப்படுகின்றன.

★ சட்டத்திற்குக் கட்டுப்பட்டு வாழும் தனது பிரஜையை – அவர் தமிழ் இனத்தவரோ இல்லையோ பாது

## ஆனால் ஆரம்பத்திலிருந்தே தகுந்த நடவடிக்கை எடுப்பது மூலம் அகதிகள் தம்மை பாதுகாக்கமுடியும்

காப்பதற்கான நல்லெண்ணத்தை இலங்கை அரசும் கொண்டுள்ளது. ஒழுங்கீனம் முன்பு நிலவிய போதும் அதனைக் கட்டுப்படுத்த இலங்கை அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதனுள் சமூக அரசியல் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளும் அடங்கும். எனவே தமிழரோ அன்றி வேறொருவரோ 1951 ஆம் ஆண்டு ஏற்பட்ட அகதிகளின் அந்தஸ்து பற்றிய பேராயத்தின் கீழ் தனது இனம், இன அழிப்பிற்குள்ளானது என்ற வகையில் அகதி அந்தஸ்து கோர அருகதையற்றவராவர்.

★ இலங்கை அரசின் பாதுகாப்புப் படையினர் முக்கியமாக 1988 – 1990 ஆம் ஆண்டிற்கிடையில் நிகழ்த்திய மனித உரிமை மீறல்களை உள்நாட்டு அலுவலகத்தினர் அறிவர். ஆனால் இலங்கை அரசானது தற்போது வகையான மீறல்களில் ஈடுபடா வண்ணம் பாதுகாப்புப் படையினரைக் கட்டுப்படுத்தி உள்ளதோடு மீறியோரிற்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுத்துள்ளது. மேலும் சுதந்திரமான [illegible] ஆணைக்குழு ஒன்றினையும் இலங்கை அரசு நியமித்துள்ளது. இவ்வாணைக் குழுவிடமிருந்து தடுத்து வைக்கப்பட்டோரைப் பற்றிய விவரங்களை மக்கள் பெற்றுக் கொள்ளலாம். தடுத்து வைக்கப்பட்டுள்ளோருக்கு சட்ட உதவிகளையும் அக்குழு வழங்குகிறது.

★ தடுத்து வைக்கப்பட்டுள்ளோர்களை மீளக்குடியமர்த்தல் மறுவாழ்வளித்தல் ஆகியவற்றிற்கான சபை மூலம் இலங்கை அரசானது தடுத்து வைக்கப்பட்டுள்ளோர்களில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடாதவர்களைத் தேர்ந்தெடுத்து விடுதலை செய்கின்றது.

★ செஞ்சிலுவைச் சங்கத்தின் அனைத்துலகக் குழு, காணாமற்போனோர் பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைக் குழு சர்வதேச மன்னிப்புச்சபை ஆகிய ஸ்தாபனங்கள் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி கொடுக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் பொலீஸ் மற்றும் ஆயுதப் படையினரிடையே ஒழுங்கு பொறுப்புத் தன்மை சம்பந்தப்பட்ட புதிய உணர்வினை அறிமுகப்படுத்தக் கூடியதாக உள்ளது. மேலும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகருக்கும் தனது பூரண ஒத்துழைப்பை இலங்கை அரசு வழங்குகின்றது.

★ இலங்கை அரசானது மனித உரிமை சம்பந்தப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்து நிறுவனங்களுடனும் ஒத்துழைத்து வருகின்றது.

★ இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியிலேயே மோதல் இடம்பெறுகின்றது. நாட்டின் ஏனைய பகுதிகளில் சாதாரணநிலைமையே காணப்படுகின்றது 1989ஆம் ஆண்டிலிருந்து நாட்டின் நிலைமையைத் தொகுத்து [illegible]

★ இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் அரசின் உபத்திரவத்திற்கன்றி அரசினால் இடைஞ்சலுக்கு உள்ளாக்கப்பட்டதாக அறியப்படவில்லை.

★ கொழும்பில் பொலீஸாரினால் தமிழ் இளைஞர்கள் பெருமளவில் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டும் தடுத்து வைக்கப்பட்டும் வருகின்றனர். ஆனால் நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும், பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக் கண்டு பிடிக்கவும் இவ்வகை விசாரணைகளும் தடுத்து வைத்தலும் இலங்கை அரசினால் எடுக்கப்படுவது தவிர்க்க முடியாததே. இவ்வகை விசாரணையும் தடுத்து வைத்தலும் ஐக்கிய நாடுகளின் பேராயத்தின் கீழ் ஆக்கினை, அடக்குமுறையாக கணிக்கமுடியாது.

★ கொழும்பிலும் வடக்கு — கிழக்கு தவிர்ந்த ஏனைய இடங்களிலும் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்கள் சிங்களவர்களினால் உபத்திரப் படுத்தப்படவில்லை. பகைமைப்படுத்தப்படவுமில்லை. 1983 ஆம் ஆண்டின் பின் குறிப்பிடத்தக்க இனக்கலவரமும் நிகழவில்லை. அப்படியொரு நிலை ஏற்படாதிருக்க இலங்கை அரசு தன்னாலானவற்றைச் செய்கின்றது. தமிழர்களுக்கெதிரான பாகுபாடும் இப்பொழுது இல்லாததோடு பல தமிழர்கள் வியாபாரத்துறையிலும் முன்னணியில் உள்ளனர். இந்நிலையில் இலங்கையின் தென்பகுதி தமிழர்கள் வாழ்வதற்குப் பாதுகாப்பான பிரதேசமாகும்.

★ மாற்று இயக்கங்களினால் தமது உயிருக்கு ஆபத்து எனக் கூறப்படுவதும் ஐக்கிய நாடுகளின் பேராயத்தின் கீழ் அகதியாகக் கணிக்கப்படுவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இலங்கை அரசானது இவ்வியக்கங்களின் செயல்களைத் தெரிந்திருந்தும் பொறுத்துக் கொண்டிருக்கின்றது அல்லது அவ்வகை செயல்களிலிருந்து விண்ணப்பதாரரைக் காப்பாற்ற இயலாத நிலையில் இலங்கை அரசு இருந்தது என நிருபிப்பது மூலமே பேராயத்தின் கீழ் வர முடியும்.

★ சுவிற்சர்லாந்து, ஒல்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளும் அகதி விண்ணப்பதாரர்களை திருப்பி அனுப்ப எண்ணுகின்றது.

இப்படியே இன்னும் பல காரணங்கள் உள்நாட்டு அலுவலகம் கூறிக் கொண்டே போகின்றது. இந் நிலையில் அகதி விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை உள்நாட்டு அலுவலகம் நிராகரிக்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளில் உடனடியாக ஈடுபடுதல் அவசியமாகின்றது.

உண்மையில் அகதி விண்ணப்பம் கோரிய நாடுகளில் இருந்தே அக்கறை கொண்டு தகுந்த நடவடிக்கை எடுத்திருப்பின் மேல் விசாரணைகளுக்கு விண்ணப்பதாரர் போகும்போது தமது வழக்கினை வெல்லக்கூடிய சாத்தியம் அமையும் என்பது அகதி அந்தஸ்தை பிரதிநிதித்துவம் செய்வதில் ஈடுபட்டுள்ளோரின் கருத்து.

### நடவடிக்கைகள்

இத்தகுந்த நடவடிக்கைகள் என்பது இருவகையில் அமையலாம். முதலாவது முன்குறிப்பிட்ட நிராகரிப்பிற்கான காரணங்களுக்கு எதிராக தத்தமது விண்ணப்பத்தினை நியாயப்படுத்தக்கூடிய வகையில் தயாரிபடுத்துதல். கூடவே அதற்கான ஆவணங்களையும் பெறுதல். தனது உயிருக்கு ஆபத்து ஏற்படுவதற்குரிய காரணங்கள் அனைத்தையும் விவரமாகத் தெரிந்து கொள்ளல். இலங்கையில் அண்மைக்காலம் வரை நடைபெற்ற மனித உரிமை மீறல்கள்; அரசியற் சம்பவங்கள் என்பவற்றை அறிந்திருத்தல், மேற்குறிப்பிட்ட அனைத்தையும் பற்றி உள்நாட்டு அலுவலகத்திற்கு அல்லது குடிவரவு அதிகாரிக்கு உரிய முறையில் சமர்ப்பித்தல்.

அடுத்து பிரசார வேலைகள் மூலம் பிரித்தானிய அரசைத் தனது கொள்கையை மாற்றும்படி செய்யவைப்பது. இதுபலரும் ஒருமித்து எடுக்க வேண்டிய நடவடிக்கையாகும். மற்றவர்கள் செய்வார்கள் நாம் பேசாதிருப்போம் என்றிராது எல்லா விண்ணப்பதாரர்களும் ஒன்று சேர்ந்து உடினடியாக செயற்படவேண்டும்.

விண்ணப்பம்ஒன்றுநிராகரிக்கப்பட்டதன் பின்பு இடம்பெறும் மேன்முறையீடு முதலில் விசேட நடுவாளர் ஒருவரால் விசாரிக்கப்படும். இவ் விசாரணையில் அனைத்து ஆவணங்களும் சமர்ப்பிப்பதோடு மேன்முறையீட்டாளரும் சாட்சியமளித்தல் நன்று இவ்விசாரணையே அடுத்து இடம்பெறும் விசாரணைகளுக்கு அடிப்படையாக அமைவதால் இவ்விசாரணைக்குப் போகுமுன் மேன்முறையீட்டாளர் தமது வழக்கினை நன்கு தயார்படுத்திக் செல்ல வேண்டும்.

விசேட நடுவாளரினால் மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்படின் இதன் பின் மூவர் அடங்கிய முறைமன்றுக்கு மேன்முறையீடு செய்யலாம். முன்மன்றின் பின்பு, உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், பிரபுக்கள் சபை என்பனவற்றிற்கு முன் பாகவும் செய்யலாம். ஆனால் இவைகள் முன்போவதற்கு பலமானதும், விவாதிக்கத்தக்கதுமான ஆதாரங்கள் வழக்கில் அமைந்திருத்தல் வேண்டும் அப்படியில்லாத வழக்குகளை மேன்முறையீட்டிற்குக் கொண்டுபோக இயலாதென வழக்குரைஞர்கள் கூறுவர். எனவேதான் ஆரம்பத்திலேயே தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் பலமானதும் விவாதிக்கத்தக்கதுமானஆதாரங்களை சேர்த்துக் கொள்ளவேண்டும்.

நன்றி: மீப்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் முருகேசு

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் முருகேசு [ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை] நேற்று [20 - 3 - 95] காலமாகிவிட்டார்.

இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும், சாந்தினி, மாலினி, மனோகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விசுவநாதர் [இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்], இராசபட்சம் [நீர் விநியோகப்பகுதி மேற்பார்வையாளர்], கந்தசாமி [பொலீஸ் உத்தியோகத்தர்], திருமதி இரத்தினம்-தனிபுலிசிங்க முதலியார், காலஞ்சென்ற திருமதி தெய்வானைப்பிள்ளை, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21-3-95) பிற்பகல் 1 மணியளவில் சுழிபுரம் கல்லைவேம்படியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
கந்தவனம்

சுழிபுரம். [35818]

## க. கணேசமூர்த்தி

யா / புங்குடுதீவு மத்தி 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கு இருபாலை வீதியை இருப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பிரபல வர்த்தகரும் கிளிநொச்சி குமரகுரு ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான கணபதிப்பிள்ளை கணேசமூர்த்தி அவர்கள் 14 - 3 - 95 இல் மேற்கு ஜேர்மனியில் அகால மரணமானார்.

அன்னார் திரு. திருமதி கணபதிப்பிள்ளை நாகேஸ்வரி [குமரகுரு ஸ்ரோர்ஸ் கிளிநொச்சி] தம்பதிகளின் அன்பு மகனும், பசுபதிப்பிள்ளை [ஆசிரியர்] தம்பதிகளின் உரிமைமிகு மருமகனும், மன்மதன் தம்பதிகளின் பெறா மகனும், பிரேமலேகாவின் பாசமிகு கணவரும், விஜிதா [யா / இந்து மகளிர் கல்லூரி மாணவி], விஜபகாந்தன், வினோதா, விஜிகரன், விஜபதாஸ் [கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மாணவர்கள்], விஜயரூபி ஆகியோரின் அன்பாதரவான தந்தையும், குமரகுரு [கொழும்பு] குகானந்தன் [சுவிஸ்], ஸ்ரீஸ்கந்தராசா [வர்த்தகர் கிளிநொச்சி], ஆனந்தவடிவேல் [சவுதி], கலைச்செல்வி, பரமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமரகுரு இராணி [வண். யாழ்நகர்], திருமதி குகானந்தன் [சுவிஸ்], திருமதி சந்திரா ஸ்ரீஸ்கந்தராசா (கிளிநொச்சி), திருமதி ஆனந்தவடிவேல் [கிளிநொச்சி], சொர்ணவதனா, ஸ்ரீசேகரன் [மேற்கு ஜேர்மனி], பரமேஸ்வரன [வர்த்தகர் கிளிநொச்சி] ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், திரு. இலட்சுமணன் தம்பதிகள் [வைமன் றோட், நல்லூர்], தி பதி சிவயோகம் சோமசுந்தரம் [செல்வானந்தம் - சென்னை, இந்தியா] அவர்களின் அன்பு மருமகனும் ஸ்ரீசேகரன் பத்மாவதியின் [மேற்கு ஜேர்மனி] சகோதரனும் ஆவார்.

தகனக்கிரியைகள் பற்றி பின்னர் தெரிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
பராசக்தி பசுபதி
[மாமியார்]

இருபாலை றோட்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். [35814]

## கந்தையா மயில்வாகனம்

### [N. K. மயில்வாகனம்]

[பிரபல வர்த்தகர் கொழும்பு]

[68, 4 ம் குறுக்குத் தெரு கொழும்பு]

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், கொழும்பு இல 95, புதுச்செட்டித்தெருவில் வசித்தவருமாகிய N.K மயில்வாகனம் அவர்கள் 19 - 03 - 95 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி கார்த்திகேசுவின் அருமை மருமகனும், கனகம்மாவின் அன்புக் கணவரும், முருகதாஸ் [வர்த்தகர். கொழும்பு], பங்கயற்செல்வி, செம்மணச்செல்வி, பறேமணச்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சுமதி, சிதம்பரநாதன், கிருஸ்ணபிள்ளை, இந்திரகுமார் ஆகியோரின் அருமை மாமனாரும், காலஞ்சென்ற பராசக்தி, காந்திமதி, சிவக்கொழுந்து, கற்பகம் [அருளம்மா], காலஞ்சென்ற தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20 3 95 நேற்று கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. ஜெகதீஸ்வரன்
[கணவன]

திருமதி. கோபாலபிள்ளை கற்பகம்,
[அருளம்மா] [சகோதரி],
40/42, சீனியர் லேன்,
கலட்டி,
யாழ்ப்பாணம். (35821)

## நாகநாதர் கந்தையா மயில்வாகனம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பு 4ம் குறுக்குத் தெரு என். கே. மயில்வாகனம் அன் கோ உரிமையாளருமான நா. க மயில்வாகனம் அவர்கள் 19- 03- 1995ல் கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையா - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், கனகாம்பிகையின் அருமைக் கணவரும், முருகதாஸ், பங்கயற்செல்வி, செம்மணச்செல்வி, பிரேமளச்செல்வி ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற பராசக்தி கனகரெத்தினம் மற்றும் காந்திமதி கண்ணையா, சிவக்கொழுந்து செல்லத்துரை, அருளம்மா கோபாலப்பிள்ளை, காலஞ்சென்ற தர்மலிங்கம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற கார்த்திகேசு - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், சுமதி, சிதம்பரநாதன், கிருஷ்ணபிள்ளை, இந்திரகுமார் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற துரைசிங்கம், சொர்ணலெட்சுமி சிவப்பிரகாசம், தில்லைநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20 - 03 - 95 அன்று கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திருமதி. பொ. சிவப்பிரகாசம்
திரு. கா. தில்லைநாதன
[மைத்துனர்]

91/2, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். [35819]

## வங்கிகளில் ஓய்வூதிய நிலுவைகள்

தென்மராட்சி, மார்ச் 21

தென்மாட்சிப் பகுதி ஓய்வூதியர்களின் கடந்த ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாத ஓய்வூதியர்களில் விடுபட்ட ஓய்வூதிய நிலுவை தென்மராட்சிப் பகுதி வங்கிளில் நேற்று முதல் வழங்கப்பட்டு வருகிறது.

யாழ். செயலகத்தால் வழங்கப்பட்ட காசோலைகளும், பட்டியல்களும் வங்கிகளுக்கு நேற்றுக் கிடைத்தன. அதனைத் தொடர்ந்து வங்கிகளில் இக் கொடுப்பனவுகள் துரிதமாக வழங்கப்பட்டு வருகின்றன. [அ-117]

## பாடசாலைகளில்

பொன்னாலை வரதாராஜப் பெருமாள் வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் திரு. புண்ணியம் விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் சங்கானை கல்விக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் பிரதமவிருந்தினராக கலந்து கொள்வார். [ஓ-161]

★ ★ ★

மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி நாளை பிற்பகல் 2 00 மணிமுதல் வித்தியாலய அதிபர் திரு. அ. நடராஜா தலைமையில் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும். [உ]

## விளையாட்டு நிகழ்வுகள்

அமரர் ஈ. கே. குமரையா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக யாழ் உதைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் — 9 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான — நொக்கவுட் ரீதியிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று மாலை அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

3.30 மணி;- சென்லூட்ஸ் எதிர் பொற்பதி

4.30 மணி;- சென்மேரிஸ் எதிர் வைக்கிங்ஸ்

★ ★ ★

தென்மராட்சி கல்விக் கோட்ட கொடிகாமம் வட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 17வயது 19வயது பிரிவு வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று பிற்பகல் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய ஆடுகளத்தில் நடைபெறும். (உ117)

★ ★ ★

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவில் — பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான — உதைபந்தாட்டப்போட்டிகள் மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

கல்வயல் பாரதி வி.க எதிர் மட்டுவில் மோகனதாஸ் வி.க.

எழுதுமட்டுவாழ் ஒலிம்பிக் வி.க. எதிர் மிருசுவில் சென் நிக்கலஸ் வி.க. [உ-117]

## புலிகளுடன் பேச்சு

கொழும்பு, மார்ச் 21

மடு யாத்திரை மேற்கொண்ட பிரதி அமைச்சர்கள் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, மில்றோய் பெர்னாண்டோ, பேட்டி திஸநாயக்கா ஆகியோர் மடுவில் வைத்து புலிகளின் மன்னார் மாவட்டத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-4)

## பாதாள ரயிலில் பயங்கர நச்சுவாயு!

லண்டன், மார்ச் 21

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் பாதாள ரயில் சேவையில் ஈடுபட்டிருந்த ரயில் ஒன்றில் நச்சுவாயு பரவியதால் ஆறு பேர் உயிரிழந்தனர்; 545 பேர் நச்சுவாயுவினால்பாதிப்புற்றனர்; பாதாள ரயில் சேவை முற்றாக ஸ்தாம்பித்தது.

முகமூடி அணிந்த நபர் ஒருவரே ''ஸரின்'' என்ற இந்த பயங்கர நச்சுவாயு அடங்கிய பொதியை ரயிலில் போட்டுச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

இந்த நச்சுவாயு பொட்டாசியம் சயனைட்டையும் விட இருபது மடங்கு வீரியமுடையது என்றும்—

இதன் ஒரு துளி தோலில் பட்டாலேயே மனிதன் இறக்க நேரிடும் என்றும் தெரிவிக்கப் பட்டது (உ-7)

# எந்தத் தடை வந்தாலும் சமாதானப் பேச்சு தொடரும்

## ஆயர் கென்னத் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 21

'சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளின் போது எந்தத் தடை வந்தாலும் சமாதான முயற்சிகள் தடைப்படாது தொடரும்.'

— இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்ட பின்னர் கொழும்பு திரும்பிய அங்கிலிக்கன் ஆயர் வண. கென்னத் பெர்னாண்டோ கூறியதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. (உ)

## கோப்பாய் பகுதியில் இம்முறை

# உவர்நில நெற்செய்கை விவசாயிகள் நல்ல பயன்

யாழ்ப்பாணம், மார்ச் 21

கோப்பாய் பகுதியில் உள்ள உவர் நிலங்களில் இம்முறை பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை வெற்றியளித்திருப்பதாக யாழ். மாவட்டவிவசாய உற்பத்தி கூட்டுறவு சமாச தலைவர் திரு எஸ் செல்வரத்தினம் தெரிவித்தார்.

இதற்கென கொழும்பில் இருந்து ஏ. ரி 402 இனத்தைச் சேர்ந்த விதை நெல் தருவிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இந்தவிதைநெல்லை விவசாயிகள் பயிரிட்டு நல்லவிளைச்சலைபெற்றிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-17)

# விவசாய கூட்டுறவு சமாசம் 'போட்டோஸ்ரற்' சேவை

## விரைவில் குறைந்த கட்டணத்தில்

குறைந்த கட்டணத்தில் ''நிழற்பிரதி சேவை'' (போட்டோஸ்ரற்பிரதி) ஒன்றை ஆரம்பிப்பதற்கு யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த சேவைக்கென சுமார் இரண்டு லட்சம்ரூபா செலவில் போட்டோஸ்ரட் இயந்திரம் ஒன்றை கொழும்பில் இருந்து மேற்படி சமாசம் தருவித்துள்ளது. (ஓ-17)

# மேலும் 700 தொன் உணவுப் பொருள்கள்

## கப்பலில் எடுத்துவர நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச், 21

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சமாசம் மூன்றாம் கட்டமாக 700 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை கப்பலில் எடுத்து வருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதுவரை 500 மெற்றிக் தொன உணவுப் பொருள்களையே மேற்படி சமாசம் கப்பல் மூலம எடுத்து வந்துள்ளது. [இ-17]

# இலங்கை செஞ்சிலுவை சங்க செயற்பாடுகள்

## மீள ஆரமபிக்க கோரிக்கை

கொழும்பு, மார்ச் 21

இலங்கை செஞ்சிலுவைச் சங்க செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க அனுமதிக்குமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு சுகாதார அமைச்சுக்கு மனுச் செய்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக குழுவின் செயலாளர் நாயகம் மேற்கண்ட மனுவை சுகாதார அமைச்சுக்கு சமர்பித்துள்ளார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க செயற்பாடுகளில் இடம் பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகளையடுத்து இலங்கை அரசு அதன் செயற்பாடுகளை மட்டுப்படுத்தியிருந்தமை தெரிந்ததே. (இ-5-3)

## புலிகளின்.....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கடிதம் தீவிரமாகப்பரிசீலனை செய்யப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி கூட்டிய உயர் மட்ட மாநாட்டில் —

மூத்த அமைச்சர்களான லக்ஷ்மன் கதிர்காமர், கேணல் அனுருத்த ரத்வத்தை, ஜீ. எல். பீரிஸ், எம். எச். எம். அஷ்ரப் மற்றும் படை உயரதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர் என்றும்—

மாநாட்டில் பலத்த கருத்து வேறுபாடு நிலவியதாகவும்—

செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

[உ-4-6-7]

## பிரபாவின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டோம் அது குறித்து பதற்றப் படவும் தேவையில்லை

புலிகள் எமக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாக நான் கருதவில்லை. அவர்கள் தமக்கு எதுவேண்டும் என்பதை சற்றுக் கடுமையாகக் கூறியுள்ளார்கள் அவ்வளவே.

அவர்கள் கடுமையான தொனியுடன் கூடிய ஒரு கடிதத்தை அனுப்பியுள்ள அதே வேளை, 16 யுத்தக் கைதிகளையும் விடுவித்துள்ளார்கள் எனவே, அவர்கள் சமிக்ஞை ஒன்றை அனுப்பியிருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

தயவு செய்து இரண்டு, மூன்று நாட்களுக்குப் பொறுத்திருங்கள். என்ன நிகழப் போகின்றது என்பதை அப்போது நீங்கள் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

சமாதானப் பேச்சுக்கள் தொடரும் என்பதில் அரசுக்கு முழு நம்பிக்கை உண்டு. —என்றார். (உ-4-6-7)

## 22 படையினரை---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தீர்ப்பதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு எடுத்துவரும் சமதான முயற்சிகளுக்கு கைதிகள் விடுவிப்புச் சம்பவம் பெரும் தைரியத்தைத் தருவதாக அமைந்திருக்கிறது என்றார்.

அரசு - புலிகளுடன் நடத்திய சமதானப் பேச்சுக்களின் விளைவே கைதிகள் விடுவிப்பு சமாதானப் பேச்சு நடவடிக்கைகளை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு இது உந்து சக்தியாக அமைந்து விட்டது என்றும் அவர் கூறினார்.

[உ-4-6]

## வாகன---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் மீது தமிழீழ காவல் துறையினரும, மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினரும் சட்டநடவடிக்கை மேற்கொள்வர் என்பதையும்—மோட்டார் ஊர்தி உரிமையாளர்களின் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

(உ)

# சித்தன்கேணி இசைவிழா: நாளைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 21

வலி மேற்கு பிரதேச கலாசார பேரவையினர், சித்தன்கேணி பிள்ளையார் கோயில் முன்றிலில் நடத்தும 5 நாள் இசைவிழாவின், 4 ஆம் நாள் நிகழ்வுகள் நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

திரு. சு. தில்லைநாதன் குழுவினரின் மங்கள இசையுடன் விழா ஆரம்பமாகும்.

பிரதேச செயலர் திரு கா. சந்திரராசா தலைமையில் நடைபெறும் 4ஆம்நாள் நிகழ்வுகளை வலி. மேற்கு பிரதேச செயலக கிராம முன்னேற்றச் சங்க சமாசத் தலைவர் திரு. அ. அரியரத்தினம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

நிகழ்வின் முதன்மைவிருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் திரு. வே. தம்பையாவும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. ந. சண்முகமும், சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு. பொ. சிவசுப்பிரமணியமும் கலந்து கொள்வர்.

விழாவில் வயலின்சோலோ, பாட்டு என்பனவும் இடம் பெறும். [ஓ-5]

# பொங்கல் விழா

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள்
வருடாந்த பொங்கல் விழா

21 — 03 — 95 செவ்வாய்க்கிழமை
முதலாவது பொங்கலும்,

28 — 03 — 95 செவ்வாய்க்கிழமை
இரண்டாவது பொங்கலும்

நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

26 — 03 — 95 ஞாயிற்றுக்கிழமை மண்டலாபிசேக பூர்த்தி 1008 சங்காபிசேகமும், மலர் வெளியீட்டு விழாவும், பகல் 12-30 மணியளவில் அன்னதானமும் நடைபெறும்.

— பரிபாலன சபையினர்.

[8392]

# மரண அறிவித்தல்கள்

## சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசம் பிலிப்

(S G பிலிப்)

புலோலியைப் பிறப்பிடமாகவும், கரம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் பிலிப் யாழ்ப்பாணத்தில் காலமானார்.

இவர் மேரி யோசேப்பின் பவளத்தின் அன்புக் கணவரும், குணநாயகம் (ஊர் - ப. நோ. கூ. ச), செபரட்னம் [அவுஸ்திரேலியா], செல்வரட்னம் [ஜேர்மனி], கலாவதி (கனடா), பிரேமாவதி (ஜேர்மனி), உதயகுமார் (கனடா), ரஞ்சனி (பிரான்ஸ்), ஜெயக்குமார், செல்வகுமார் (மாஸ்லண்), நிலானி ஆகியோரின் அன்புத் தந்தையும், கு. இராஜேஸ்வரி, ஜீவா [அவுஸ்திரேலியா], செல்வகுமார் [கனடா], ஜெரி [ஜேர்மனி], சாந்தி [கனடா], அருள் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அந்தோனி பாலசிங்கம் (சில்லாலை), இராசம்மா - வேதநாயகம் [புலோலி], சந்தியாப்பிள்ளை [யாழ் ஆயர் இல்லம்], லூட்ஸ் ஆசீர்வாதம் [புலோலி] ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் புதன்கிழமை காலை 8-30 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியைத் தொடர்ந்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
பி. குணநாயகம்
[மகன்]

இல: 86, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். [35816]

சின்னத்தம்பி

## தம்பிப்பள்ளை பொன்னுத்துரை

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை பொன்னுத்துரை 20 . 3 . 95 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற அன்னம்மா, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புக் கணவரும், குகனேசமலர் (ஆசிரியை, உருப்பிராய் இந்துக் கல்லூரி), கோபிநாத்சிங் (சுவிஸ்), சற்குணநாதன் (கணக்குப் பதியுநர், சிமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை), சரச்சந்திரன் (இளைப்பாறிய பொலீஸ் இன்ஸ்பெக்டர்), அனுராதா (வவுனியா), செந்தூர்ச் செல்வா (மாறன் பதிப்பகம்), விவேகினி, அனித்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.3.95) செவ்வாய்க்கிழமை வேம்பன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் வேம்பன் மயானத்திற்கு பி.ப 2 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
சற்குணநாதன்
[மகன்]

உரும்பிராய் தெற்கு,
வேம்பன் வீதி (ஒஸ்கா லேன்) (35822)

## ஸ்ரீலஸ்ரீ வ. குமாரசுவாமிக்குருக்கள்

(பௌராணிக வித்தகர்)

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த வீரகத்திப் பிள்ளையார் கோயில் ஆதீனகர்த்தா ஸ்ரீலஸ்ரீ வயித்திலிங்கம் குமாரசுவாமிக் குருக்கள் நேற்று (20-3-95) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற திருமதி பராசக்தி தியாகராசா, கலாநிதி வ. கணேசலிங்கம் (திட்டமிடல் பணிப்பாளர் - மார்க்கா நிறுவனம்), வ. மகாலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்), காலஞ்சென்ற திருமதி வீணாவாதவிதுசனி கனகசபாபதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணியளவில் சுழிபுரத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் திருவடிநிலை மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. மகாலிங்கம்
(சகோதரர்)

காளுவன்,
சுழிபுரம். (35823)

இப்பத்திரிகை [illegible] லிமிற்றெட்டின [illegible] வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் [illegible] 1995 [illegible] யிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org